SLSI
2018

வருடாந்த அறிக்கை

தொலை நோக்கு

பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் கட்டளைப்படுத்தல் மற்றும் தரத்தை மேம்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக தேசத்தின் வாழ்க்கைத் தரத்தை வளமூட்டுவதற்காக தலைமைத்துவத்தை வழங்கி இலங்கையின் முதன்மையான தேசியத் தாபனமாக விளங்குதல்.



செயற்பணி

நிறுவனத்தின் ஊழியர்களின் பணி வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்தும் அதேவேளை, பின்வருவனவற்றைச் சாதிப்பதற்காக, தேசியப் பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் கட்டளைப்படுத்தலையும், அளவீட்டையும், தர உறுதிப்படுத்தலையும் மற்றும் தொடர்பான செயற்பாடுகளையும் பொறுப்பேற்றல், மேம்படுத்தல் மற்றும் வசதிப்படுத்தல்;

- உற்பத்தித்திறனை அதிகரித்தலும், வளங்களின் பயன்படுத்தலை அதிகபட்சமாக்குதலும்;
- உள்ளக மற்றும் வெளியார் வர்த்தகத்தை வசதிப்படுத்தல்;
- சமூக-பொருளாதார அபிவிருத்தியைச் சாதித்தல்;
- உற்பத்திகளினதும், சேவைகளினதும் சர்வதேசப் போட்டித்தன்மையை உயர்த்துதல்;
- பாவனையாளர்களின் அக்கறையைப் பாதுகாத்தல்.

சேரல்: கௌரவ விஞ்ஞான, தொழில்நுட்ப,
புத்தாக்க அமைச்சர்

கௌரவ ஐயா,

1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின் பிரகாரம், 01.01.2018 முதல் 31.12.2018 வரையிலான காலத்தை உள்ளடக்கும் இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையைச் சபை உறுப்பினர்களின் சார்பில் சமர்ப்பிப்பதில் நான் கௌரவம் அடைகின்றேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள

(கையொப்பமிடப்பட்டுள்ளது)
பேராசிரியர் டபிள்யு.எம்.அபேரத்ன பண்டார
தலைவர்
இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்
2020.01.30

பொருளடக்கம்


பக்க இலக்கங்கள்

சபையின் உறுப்பினர்கள்	06
சிரேஷ்ட முகாமைத்துவக் குழாம்	07
அறிமுகம்	08
2018ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள்	09
வருமானத்தைத் தோற்றுவித்தல் செயற்பாடுகள்	11
பிரிவுசார் செயற்பாடுகள்	12
விஞ்ஞானக் கட்டளைகள் பிரிவு	12
விஞ்ஞான எந்திரவியல் கட்டளைகள் பிரிவு	15
தர உறுதிப்படுத்தல் பிரிவு	16
முறைமைகள் சான்றளிப்புப் பிரிவு	17
பயிற்சிப் பிரிவு	20
சந்தைப்படுத்தல், மேம்படுத்தல் பிரிவு	21
ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு	22
அளவையியல் பிரிவு	30
ஆவணப்படுத்தல், தகவல் பிரிவு	31
உற்பத்தி சான்றளிப்பு பிரிவு	32
நிருவாகப் பிரிவு	34
தகவல் தொழில்நுட்ப அலகு	35
நிதிப் பிரிவு	37
உள்ளகக் கணக்காய்வு	37
விஞ்ஞானக் கட்டளைகள் பிரிவினால் வெளியிடப்பட்ட ஆவணங்கள்	38
எந்திரவியல் கட்டளைகள் பிரிவினால் வெளியிடப்பட்ட ஆவணங்கள்	51
வெளிநாட்டுப் பயிற்சி	54
உள்நாட்டுப் பயிற்சி	56
வெளிநாட்டுத் தணிக்கைகள்	58
பணியாளரின் செய்தி	61
துறைசார் குழுக்களின் அடக்கம்	63
2018.12.31இல் உள்ளவாறு நிதிசார் நிலையின் கூற்று	70
2018.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானத்தின் கூற்று	71
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	107
அறிக்கை மீதான தலைவரின் கருத்துரைகள்	111

விலாசம்

இல. 17 விக்டோரியா பிளேஸ்
எல்விற்றிகல மாவத்தை
கொழும்பு 8


தொலைபேசி: 2671567-72
2697039, 2674618
∴பக்ஸ்: 2687523, 2671579, 2672617, 2672616
தொலைநகல்: slsi@slsi.slt.lk
இணையதளம்: http:/www.slsi.lk





	தொலைபேசி இல.
தலைவர்	2671573
பணிப்பாளர் நாயகம்	2671574
பிரதிப் பணிப்பாளர் நாயகம்	2671575
பிரதிப் பணிப்பாளர் நாயகம்	2697029
விஞ்ஞானக் கட்டளைகள் பிரிவு	2672614
எந்திரவியல் கட்டளைகள் பிரிவு	2672612
தர உறுதிப்படுத்தல் பிரிவு	2671578
ஆய்வுகூட சேவைகள் பிரிவு	2694985
அளவையியல் பிரிவு	2674619
முறைமைச் சான்றளிப்புப் பிரிவு	2672613
ஆவணப்படுத்தல், தகவல் பிரிவு	2672615
பயிற்சிப் பிரிவு	2685546
சந்தைப்படுத்தல், மேம்படுத்தல் பிரிவு	2694981
நிருவாகப் பிரிவு	2671576
நிதிப் பிரிவு	2671577
உற்பத்தி சான்றளிப்புப் பிரிவு	5626204

இ.க.நி.
தாபனரீதியிலான கட்டமைப்பு





தலைவரிடமிருந்து செய்தி

2018இன் வருடாந்த அறிக்கைக்கு இலங்கைக் கட்டளை நிறுவனத்தின் (இ.க.நி.) தலைவரொருவராக இந்த செய்தியை எழுதுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பலதரப்பட்ட துறைகளில் தேசியரீதியிலான கட்டளைகளின் எல்லைகளை விஸ்தரிக்கும் பரந்த செயற்பணிக்கு அமைவாக, நாட்டுக்கு அதிகளவு சேவைகளை வழங்குவதற்கு இ.க.நி. நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத்தினதும், பாவனையாளர்களினதும் உதவியுடனும் மற்றும் எமது நாட்டின் சேமநலனினதும் மற்றும் அக்கறையினதும் காரணமாக தற்போது வரை இ.க.நி. சாதித்துள்ளது என்பது குறித்து நாம் பெருமையடையவேண்டும்.

இ.க.நி.இன் அத்தகைய அர்ப்பணிப்பிலான பணியாளருடன் பணியாற்றுவது எனக்கு சிறப்புரிமையொன்று என்பதுடன், ஆண்டு முழுவதும் அவர்களது கடமைகளின் செயற்றிறனான நிறைவேற்றத்திற்கும் மற்றும் அளவற்ற ஆதரவுக்கும் அவர்களது அர்ப்பணிப்புக்காக அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

இறுதியாக, பாரியளவிலான உயரங்களுக்காக இ.க.நி.ஐக் கொண்டு செல்வதற்கான எமது முயற்சிகளில் அவர்களது பெறுமதியான பங்களிப்புக்கு பணிப்பாளர் நாயகத்திற்கும் மற்றும் சபையின் உறுப்பினர்களுக்கும் அத்துடன் ஆண்டின் போது எமக்கு நீடிக்கப்பட்ட சகல ஆதரவுக்கும் விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் சகல அலுவலர்களுக்கும் நான் நன்றிகூறுகின்றேன்.

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
∴பர்மான் காசிம் P.C
தலைவர்
இ.க.நி.



பணிப்பாளர் நாயகத்திடமிருந்து செய்தி

2018ஆம் ஆண்டுக்கான இலங்கைக் கட்டளை நிறுவனத்தின் (இ.க.நி.) வருடாந்த அறிக்கையை உங்களுக்கு முன்வைப்பதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்

உற்பத்திச் சான்றளிப்பு, முறைமைச் சான்றளிப்பு, பயிற்சி, மதிப்பாராய்தல், தகவல் சேவைகள், இறக்குமதிகளின் சோதனை மற்றும் ஆய்வுகூடச் சேவைகள் போன்ற ஒரு தொகையிலான வேறு சேவைகளை வழங்கும் அதேவேளை, தேசிய கட்டளைகளை வகுத்தமைப்பதன் ஊடாக நாட்டின் சகல துறைகளிலும் தர மேம்படுத்தலில் தாக்கத்தினைக் கொண்டுள்ள இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய பங்கொன்றை இலங்கை கட்டளைகள் நிறுவனம் (இ.க.நி) தொடருகின்றது.

எமது நாட்டின் சேமநலனின் அக்கறையில் அரசாங்கத்துடனும், கைத்தொழிலிலுடனும் மற்றும் பாவனையாளர்களுடனானுமான ஒத்துழைப்புடன் இதுவரை இ.க.நி. புரிந்த சாதனை குறித்து நாம் பெருமைகொள்கின்றோம். மேலும், கட்டளைகளின் முக்கியத்துவத்தைச் செயற்றிறனாகப் பரப்புவதன் மூலம் உற்பத்திப்பொருட்களினதும், சேவைகளினதும் தரத்தை மேம்படுத்துவதற்கு அதன் முழுமையான முயற்சிகளை இ.க.நி. ஒன்றுதிரட்டும் என நம்பப்படுகின்றது.

கௌரவ அமைச்சருக்கும், விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் செயலாளருக்கும், தலைவருக்கும் மற்றும் சபையின் உறுப்பினர்களுக்கும் எனது விசுவாசமான நன்றியறிதல்களை நீடிப்பதற்கு இந்த வாய்ப்பினை எடுத்துக்கொள்கின்றேன். இறுதியாக, எனக்கு முன்பதவி வகித்தவர்களினாலும், முழு முகாமைத்துவக் குழாமினாலும் ஆற்றப்பட்ட பெறுமதிமிக்க பங்களிப்பிற்கும், ஒவ்வொரு மட்டத்திலும் எனது பணியாளரினால் எடுத்துக்காட்டப்பட்ட அர்ப்பணிப்புக்கும் மற்றும் ஈடுபாட்டிற்கும் எனது பாராட்டுதலைப் பதிவுசெய்வதற்கு நான் விரும்புகின்றேன்.

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
கலாநிதி சித்திகா ஜி.சேனாரத்ன
பணிப்பாளர் நாயகம்/CEO

கூட்டாண்மைத் தகவல்

நிறுவனத்தின் பெயர்	இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்
நியதியாக்க நிலை	1984இன் அதிகாரச்சட்டம் இல.06இனால் நீக்கப்பட்டு, பதிலீடு செய்யப்படும் வரை இலங்கைக் கட்டளைகள் பணியகம் என்ற பெயரின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதியாக்க உறுப்பு
பிரதான அலுவலகம்	இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விற்றிகல மாவத்தை கொழும்பு 08
தொலைபேசி	011-2671567-72, 2697039, 2674618
இணையதளம்	http:/www.slsi.lk
ஈ-மெயில்	slsi@slsi.slt.lk
தொலைநகல்	011-2687523, 2671579, 2672617, 2672616

31.12.2018இல் உள்ளவாறு பணிப்பாளர் சபை	திரு.எச்.எம்.பீ.சி.ஹேரத்	தலைவர்
	கலாநிதி சித்திகா (திருமதி) ஜி.சேனாரத்ன	உப-தலைவர்/ பணிப்பாளர் நாயகம்
	பேராசிரியர் சி.பி.தீபால் மத்தியூ	சபை உறுப்பினர்
	கலாநிதி பி.தல்கஸ்வத்த	சபை உறுப்பினர்
	பேராசிரியர் சிறிமலி பெர்னாண்டோ	சபை உறுப்பினர்
	எந்திரி. கே.எஸ்.எம்.சில்வா	சபை உறுப்பினர்
	திரு.ருவான் எதிரிசிங்க	சபை உறுப்பினர்
	திருமதி சி.என்.திலகரத்ன	சபை உறுப்பினர்
	திரு.சி.ஜே.கே.பெரேரா	சபை உறுப்பினர்
	திருமதி இந்திகா ரணதுங்க	சபை உறுப்பினர்
	செல்வி ரொஷானாரா டீ குரூஸ்	சபை உறுப்பினர்

31.12.2018இல் உள்ளவாறு ஊழியர்களின் மொத்த எண்.	329
கணக்காய்வாளர்கள்	கணக்காய்வாளர் தலைமை அதிபதி,கணக்காய்வாளர்தலைமை அதிபதியின் திணைக்களம், இல.306/72 பொல்துவ வீதி, பத்தரமுல்ல
வங்கியாளர்கள்	இலங்கை வங்கி - அதியுயர் தர வங்கி

சபையின் உறுப்பினர்கள்

திரு.பி.என்.எஸ்.கே. குணவர்தன
தலைவர் - 25.01.2018 வரை
B.Sc (Eng.)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a) மற்றும் 7 (1)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு.உதய ஆர்.செனிவிரத்ன
பதில் தலைவர் - 01.02.2018 முதல் 04.03.2018 வரை விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சுக்கான செயலாளர்
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a) மற்றும் 7 (1)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு.எச்.எம்.பீ.சி.ஹேரத்
பதில் தலைவர் - 05.03.2018 முதல் 23.05.2018 வரை
01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக மீள்-நியமிக்கப்பட்டார்
B.Sc (Botany), India, M.Sc. (Forestry)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a) மற்றும் 7 (1)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி டபிள்யு. நயனா என். சத்தரசிங்க
பதில் பணிப்பாளர் நாயகம் - 31.07.2018 வரை
M.Sc, Auditor of ISO 9001, ISO 14001 and Occupational health & Safety Management systems, Examiner of National Quality Awards Scheme.
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (i) மற்றும் 7 (2)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி (திருமதி) சித்திகா ஜி.சேனாரத்ன
பணிப்பாளர் நாயகம்/உப-தலைவர் - 01.08.2018இலிருந்து செயற்படத்தக்கதாக
B.Sc.-Chem.Sp. (Hons), PhD (UK)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (i) மற்றும் 7 (2)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி சுரனி சந்திக திக்கும்புர
சபை உறுப்பினர் - 30.01.2018 வரை
சட்டத்தரணி
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு.ருவான் எதிரிசிங்க
சபை உறுப்பினர் - 23.05.2018 வரை
01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக மீள்-நியமிக்கப்பட்டார்
B.Sc (Eng), PG Diploma in Construction Mgt.
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (h)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் சி.பி.தீபால் மத்தியூ
சபை உறுப்பினர் - 23.05.2018 வரை
01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக மீள்-நியமிக்கப்பட்டார்
Ph.D (Bio Cem) (Col).,M.Sc.(Col).,B.Sc (Sp)., Diploma (Osaka)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (g)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

எந்திரி கே.எஸ்.எம்.சில்வா
சபை உறுப்பினர் - 23.05.2018 வரை
01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக மீள்-நியமிக்கப்பட்டார்
B.Sc. Eng. (Hons), M.Eng (structural), C.Eng., MIE (SL), MSSE (SL), DIPM (UK), Chartered Eng., Green Associated Professional – SLGBC
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (f)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் சிரிமலி பெர்னாண்டோ
சபை உறுப்பினர் - 23.05.2018 வரை
01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக மீள்-நியமிக்கப்பட்டார்
MBBS (Col), Dip Med Micro (Col), MSC (Lond), FNASSL
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (c)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி பிரியதர்ஷினி தல்கஸ்வத்த
சபை உறுப்பினர் - 25.05.2018 வரை
01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக மீள்-நியமிக்கப்பட்டார்
Ph.D, M.Sc. (Mgt)., M.Sc. (Bio) BSc
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு.சி.ஜே.கே.பெரேரா
சபை உறுப்பினர் - 25.05.2018 வரை
01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக மீள்-நியமிக்கப்பட்டார்
I.B. Com (Special), Chartered Accouutancy Licentiate Certificate
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (b)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி சந்திரிகா திலகரத்ன - பணிப்பாளர் நாயகம்
சபை உறுப்பினர் - 01.05.2018 வரை
M.Sc. (Mgt.), B.Sc. (Special) (Agr.)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (e)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு.ரொ'ான் ஜயதிலக்க
சபை உறுப்பினர் - 27.02.2018 வரை
B.Sc. (Agr.) M.Sc. (Agr.), Masters in International Development Studies, (Japan)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (d)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி இந்திகா ரணதுங்க
சபை உறுப்பினர் - 01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக
Master of International Business (Australia)
Master of Commerce (Australia)
Master of Economics, University of Kelaniya
PGD Public Management Project
PGD Internatioal Relations, Attorney –at-Law
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (d)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

செல்வி ரொஷானாரா டீ குரூஸ்
சபை உறுப்பினர் - 01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக
MBA, FCMA (UK), CGMA, Management Consultant
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

முகாமைத்துவக் குழாம்

திரு.பி.என்.எஸ்.கே. குணவர்தன
தலைவர் - 01.02.2018 வரை
B.Sc (Eng.)

திரு.உதய ஆர்.செனவிரத்ன
பதில் தலைவர் - 01.02.2018 முதல் 04.03.2018 வரை

திரு.எச்.எம்.பீ.சி.தே'ரத்
பதில் தலைவர் - 05.03.2018 முதல் 25.03.2018 வரை
01.06.2018இலிருந்து செயற்படத்தக்கதாக மீள்-நியமிக்கப்பட்டார்
B.Sc (Botany), India, M.Sc. (Forestry)

கலாநிதி (திருமதி) சித்திகா ஜி.சேனாரத்ன
பணிப்பாளர் நாயகம்/பி.நி.அ. –
01.08.2018இலிருந்து செயற்படத்தக்கதாக
B.Sc. Chem. Sp. (Hons), PhD (UK)

திரு. எ.ஏகநாயக்க
பணிப்பாளர் (பயிற்சி)/பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் - 26.03.2018 வரை
பணிப்பாளர் நாயகம் - 27.03.2018 முதல்
B.Sc. (Sp), M.Sc.-Physics, ISO 9000 Lead Auditor, NQA Examiner

திருமதி சமந்தி நாரங்கொட
பணிப்பாளர் (முறைமைச் சான்றளிப்பு)
11.09.2018இலிருந்து பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம்
MBA (Sri J-PIM) , P G Dip in Mgt, B.Eng., MIET (UK),QMS/EMS/OHSAS Auditor, NQA Examiner

திரு.எம்.எஸ்.எஸ்.பெர்னாண்டோ
பணிப்பாளர் (எந்திரவியல் கட்டளைகள்)
B.Sc (Eng.), MBA, AMIE (SL), QMS Lead Auditor (IRCA-UK)

திரு.கே.எம்.சி.பீ.சேனாரத்ன
பணிப்பாளர் (நிருவாகம்) – 10.07.2018 வரை
MDefS, B Sc (Mgt), EDBA, MISMM

திரு.பீ.டி.ஆரியரத்ன
பணிப்பாளர் (ஆவணப்படுத்தல், தகவல்)
B.Sc. (Special), M I P (SL)

திருமதி எம்.பீ.டி.நீலகாந்தி
பணிப்பாளர் (தர உறுதிப்படுத்தல்)
MBA, M.Sc./B.Sc. (Special) Hons. QMS/EMS/EaMS/OHSAS Auditor, Six Sigma (Green Belt), ASQ member

திரு.எல்.பி.எல்.சித்திரகே
பணிப்பாளர் (ஆய்வுகூட சேவைகள்)
B.Sc (Sp), M.Sc. C Phys, MIP (SL)

திருமதி எஸ்.உடகார
பணிப்பாளர் (அளவையியல்)
B.Sc (Sp), M.Sc (Physics of Materials) M I P (SL), ISO17025 Technical Assessor, ISO9001 & QMS Auditor

திருமதி எம்.ஐ.எஸ்.ஜயசேகர
பணிப்பாளர் (தரப்படுத்தல்)
B.Sc. Special (Hons), M.Sc (Food Sc. & Tech) Auditor: ISO 9001, QMS, ISO 22000 FSMS, HACCP, GMP Auditor

திருமதி எச்.ஜி.எஸ்.சூரியஆரச்சி
பணிப்பாளர் (உற்பத்தி சான்றளிப்பு) – 24.09.2018 வரை
B.Sc (Special), M.Sc. (Microbiology), ISO 22000, FSMS, HACCP Auditor, பணிப்பாளர் நாயகம் ISO14000 EMS Auditor, ISO 17025 Technical Assessor

செல்வி ஆர்.ரூபசிங்க
பணிப்பாளர் (நிதி) – 11.07.2018 வரை
A CA (SL), ACMA – UK

திருமதி ரி.சேனாரத்ன
பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்)
B.Sc.(Chem.Special), MBS, QMS Lead Auditor (IRCA-UK) Auditor for OHSAS & SA 8000, Examiner for NQA, Cerfied Member (SLIM)

திரு.டபிள்யு.ஜி.எம்.எஸ்.பெரேரா
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு அலகு)
Licenciate Certificate
இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம்

திருமதி டி.பீ.எம்.ராஜசிங்க
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (நிதி)
11.07.2018 முதல் பணிப்பாளரின் (நிதி) கடமைகளைக் கவனிக்கின்றார்
Licenciate Certificate. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், IPFDA

திரு.எம்.எஸ்.எம்.அலியார்
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
26.09.2018 முதல்பணிப்பாளரின் (PC) கடமைகளைக் கவனிக்கின்றார் -
B.Sc. (Special), M.Sc., MIP (SL), SL NQA Examiner, ISO 9001; QMS Auditor

திருமதி எ.எ.பி.டி.பிஜேரா
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
பணிப்பாளரின் (T) கடமைகளை 06.02.2018 முதல் கவனிக்கின்றார்
B.Sc. (Gen) in Bio Science (Hons) M.Sc. in Environmental Science

அறிமுகம்

1964இன் 38ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் பணியகச் சட்டத்தின் கீழ், இலங்கைக் கட்டளைகள் பணியகமாக இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் (இ.க.நி) தாபிக்கப்பட்டது. 1984இன் 6ஆம் இலக்கச் சட்டத்தினால் 1984இல் இச் சட்டம் நீக்கப்பட்டு, இலங்கைக் கட்டளைகள் நிறுவனமாக தாபனத்தை மீள்பெயரிட்டதுடன், இலங்கையில் தரப்படுத்தலையும், தர முகாமைத்துவச் செயற்பாடுகளையும் மேம்படுத்தும் ஆரம்பநிலைப் பொறுப்புடன் அதிகாரமளிக்கப்பட்டது.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், பின்வரும் பிரதான நோக்கங்கள் நிறுவனத்திற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளன:

அ. தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையில் கட்டளைகளை வகுத்தமைத்தல்.
ஆ. கட்டளைப்படுத்தலின் மேம்படுத்தல் மற்றும் கைத்தொழிலிலும், வர்த்தகத்திலும் தரத்தைக் கட்டுப்படுத்தல்.
இ. கட்டளைப்படுத்தலினதும், மற்றும் தரக் கட்டுப்பாட்டினதும் நடைமுறையை நீடிப்பதற்காக ஆய்வுகூடங்களையும், நூலகத்தையும் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட வசதிகளையும் தாபித்தல்.
ஈ. உற்பத்திகளையும், பண்டங்களையும் மற்றும் பொருட்களையும் அத்துடன் உள்ளூரில் தயாரிக்கப்படும் உற்பத்திகளினதும், பண்டங்களினதும் மற்றும் பொருட்களினதும் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் செய்முறைகளையும், வழக்கங்களையும் பரீட்சித்தலும், சோதித்தலும்.
உ. அவசியப்படும் நியமங்களுக்கு இணங்கத்தக்கதாக கருவிகளினதும் மற்றும் வேறு உபகரணங்களினதும் சோதித்தலுக்கும் மதிப்பாராய்தலுக்கும் ஒழுங்குகளைச் செய்தல் அல்லது வசதிகளை வழங்குதல்.
ஊ. கட்டளைப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டுச் செயற்பாடு ஆகியவற்றில் ஆராய்ச்சியைப் பொறுப்பேற்பதற்காக வசதிகளை வழங்குதலும், ஒழுங்கு செய்தலும்.
எ. சான்றளிப்பு குறிகள் திட்டமொன்றைச் செயற்படுத்தல்.
ஏ. பண்டங்களினதும், பொருட்களினதும் மற்றும் வேறு உற்பத்திகளினதும் தரத்தை சான்றுப்படுத்தல்.
ஐ. கட்டளைப்படுத்தலையும் மற்றும் தரக் கட்டுப்பாட்டையும் மேம்படுத்தல்.
ஒ. ஏதாவது நபருடன், சங்கத்துடன் அல்லது நிறுவனத்துக்கு ஒத்த இலங்கைக்கு வெளியேயுள்ள தாபனத்துடன் ஒத்துழைப்பை வழங்குதல்.
ஓ. பண்டங்களினதும், பொருட்களினதும் உற்பத்திகளினதும் மேம்படுத்தலுக்கு உற்பத்தியாளர்களினதும், பாவனையாளர்களினதும் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

மனித மூலவளங்கள்

2018ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், பணியாளரின் மொத்த எண்ணிக்கை 341 என்பதுடன், ஆண்டின் இறுதியில் 329 ஆகும்.

பணியாளர்களது அறிவை வளமாக்குமுகமாக, மனித வள அபிவிருத்தித் துறையில் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக பயிற்சியை நிறுவனம் வழங்கியுள்ளது. இதனால் தமது பணிகளை மேற்கொள்வதில் அவர்களால் பயனுறுதிவாய்ந்ததாக பங்களிக்க முடியும். மேலும், 2018ஆம் ஆண்டின் போது, அவசியமான தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சியை வழங்குவதன் மூலம், ஊழியர்களின் நிறைவேற்றுப் பணியாளர் வகுதியின் தொழில்நுட்பத் தகுதியை விருத்திசெய்வதற்கும், உயர்த்துவதற்கும் நிறுவனம் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

2018ஆம் ஆண்டின் போது, கைத்தொழிலுக்கும், வர்த்தகத்திற்கும் அதன் சேவைகளைச் செயற்றிறனாகவும், பயனுறுதிவாய்ந்ததாகவும் வழங்குவதன் மூலம், அதன் சுயநிறைவு நிலையை இ.க.நி.இனால் பராமரிக்கக்கூடியதாக இருந்தது.

2018ஆம் ஆண்டின் போது தொழிற்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 746.386 மில்லியனாக இருந்த வேளை, 2017ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 713.954 மில்லியனாகும்.

இது ரூபா 32.432 மில்லியன் கொண்ட அதிகரிப்பொன்றை விளைவித்துள்ளது. மேலும், இச் சூழ்நிலையானது 2017ஆம் ஆண்டிலிருந்து 2018 வரை ஊழியர் ஒருவரின் வருமானத்தில் ரூபா 2.1 மில்லியனிலிருந்து ரூபா 2.2 மில்லியன் வரை அதிகரிப்பொன்றுக்கு இட்டுச்சென்றுள்ளது.

ஆண்டின் சிறப்பம்சங்கள் - 2018

1. இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் ஆதரவின் கீழ், இ.க.நி.இன் முழு வேலைப்படைக்கும் இலவசமாக லங்கா அரசாங்க வலைப்பின்னல் ஊடாக wi–fi வழங்குவதற்கு இ.க.நி. நடவடிக்கையை ஆரம்பித்தது.

2. 2018 நொவம்பரிலிருந்து செயற்படத்தக்கதாக இறக்குமதியாளர்களினால் அறிவித்தல்களின் 'ஒன்லைன்' சமர்ப்பணம் உட்பட இறக்குமதிச் சோதனைத் திட்டத்தின் 'ஒன்லைன்' செயற்பாட்டிற்காக 'ஒன்லைன்' முறைமையை தர உறுதிப்படுத்தல் பிரிவு ஆரம்பித்தது.

3. ISOஇன் வழிகாட்டலின் கீழ், இலங்கைக்கு தேசிய கட்டளைப்படுத்தல் உபாயத்தை (NSS) தாபிப்பது தொடர்பான செயற்பாடுகளை ஆரம்பித்தது.

4. தென் ஆசிய பிராந்தியக் கட்டளைப்படுத்தல் தாபனத்தின் (SARSO) துறைசார் தொழில்நுட்பக் குழுக்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்நுட்பக் கூட்டங்களில் பங்கெடுப்பதன் மூலமும் அத்துடன் கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர்களாகச் சேவையாற்றுவதன் ஊடாகவும் செயற்பாடுகளில் பிரிவின் தொழில்நுட்பப் பணியாளர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

5. சுற்றுலாத்துறை மற்றும் தொடர்பான செயற்பாடுகள் துறைக்கான முதலாவது வெளியிடப்பட்ட தேசிய கட்டளை SLS ISO 21101: 2017 ஆகும். 2018இல் பாசிக்குடாவில் 3 தொடர்ச்சியான நாட்களின் போது நடத்தப்பட்ட முன்னோடித் திட்டமொன்றில் இ.க.நி.இன் நான்கு அலுவலர்கள் பங்கெடுத்தனர். கட்டளையை மேம்படுத்துவதே செயற்றிட்டத்தின் நோக்கமாகும் (SLS ISO 21101: 2017 - துணிகர சுற்றுலாத்துறை – பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைத் தேவைப்பாடுகள்). இது தேசியக் கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் மத்திய கருத்திட்ட முகாமைத்துவ அலகு (CPMU), இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA), பிரதமரின் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகம் (PDO) ஆகியவற்றின் உதவியுடன் ஒழுங்குபடுத்தப்பட்டது.

6. கட்டளைப்படுத்தல் தேவைகள் மீதான தகவலைத் திரட்டுவதற்காக UNIDOஇன் உதவியுடன் பதப்படுத்தப்பட்ட உணவுகள், வாசனைத்திரவியத் துறையின் பயனுரித்தாளர்களுக்காக விழிப்பியல் செயற்றிட்டம் நடத்தப்பட்டது.

7. IDBஇன் உதவியுடன் தயாரிப்பாளர்கள் மத்தியில் கேசம் மற்றும் அழகுப் பராமரிப்பு கைத்தொழில் மேம்படுத்தப்பட்டது.

8. கொழும்பு நகரப் பிராந்திய உணவுப் பாதுகாப்பு (CRFS) கருத்திட்டம் - கொழும்பு மாநகர சபையுடனான கூட்டுமுயற்சியுடன் ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாயத் தாபனத்தினால் (FAO) ஒழுங்குபடுத்தப்பட்ட உசாவுகைச் செயலமர்வுகள், கூட்டங்கள் மற்றும் பின்தொடர் உள்நாட்டு குழுக் கூட்டங்கள் ஆகியவற்றில் தீவிரமாகப் பங்களிக்கப்பட்டது.

ஆண்டின் சிறப்பம்சங்கள் - 2018

9. 2018 ஜனவரி 22 முதல் 25 வரை "தேசிய கட்டளைப்படுத்தல் உபாயங்களை விருத்திசெய்தல்" மீதான ISO செயலமர்வை நடத்தியது.

10. நாட்டில் மின் பாவனையைக் குறைக்கும் குறிக்கோளுடன் குடித்தனப் பிரயோகங்களில் சக்தி செயற்றிறன் மின்சார உபகரணங்களை மேம்படுத்துவது தொடர்ந்தது. இந்த விளைவில் CFLக்கான சக்தி செயற்றிறன் சுட்டித்துண்டிடுதல் திட்டத்தினதும் மற்றும் ஒளியை வெளியிடும் டியோட்டுக்கான LED குறைந்தபட்ச சக்தித்திறன் சான்றளிப்பினதும் செயற்பாடு வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டது.

11. GMP/விதாத, SLS சான்றளிப்பு மீது விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சைச் சேர்ந்த விதாத அலுவலர்களுக்கு பயிற்சிச் செயற்றிட்டம் நடத்தப்பட்டதுடன், GMP/SLS/விதாத தணிக்கையாளர்களாக அவர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

12. பச்சை இல்ல வாயு வெளியேற்ற GHG சரிபார்த்தல், FSSC 22000 சான்றளிப்புத் திட்டம் ஆகியவற்றுக்கான புதிய சான்றளிப்புத் திட்டம் தாபிக்கப்பட்டது.

13. உறுப்பினர்களாகவும் மற்றும் வாக்களிப்பவர்களாகவும் சேவை ஆற்றுவதன் மூலம், ISO தொழில்நுட்பக் குழுக்களுக்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை முறைமைகள் சான்றளிப்பு பிரிவைச் சேர்ந்த பெருமளவு அலுவலர்கள் வழங்கினார்கள்.

14. சூழல் முகாமைத்துவம் மீதான தேசிய சாளர குழுவுக்கான செயலாளராக பணிப்பாளர் (SC) தொடர்ந்தார்.



வருமானத்தை தோற்றுவித்தல் செயற்பாடுகள்

2001இல் அறிமுகப்படுத்தப்பட்ட இ.க.நி.இன் வருமானத்தைத் தோற்றுவித்தல் மீதான உந்துகை 2018ஆம் ஆண்டின் போது தொடர்ந்ததுடன், அது 746.386 மில்லியன் ரூபா கொண்ட வருமானத்தைப் பதிவு செய்தது. இது எதிர்வுகூறப்பட்ட வருமானத்தை 79.136 மில்லியன் ரூபாவினால் விஞ்சியுள்ளதுடன், வருமானத்தின் மூலமொன்றாக, அரசாங்க உதவு தொகைகள் மீது தங்கியிருத்தலையும் நீக்கியுள்ளது.

நிறுவனத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் (ஆண்டுக்காக ரூபா 743.386 மில்லியன் கொண்ட வரவு-செலவுத் திட்டமிடப்பட்ட வருமானத்திற்கு எதிராக ரூபா 667.250 மில்லியன் கொண்ட மொத்தம்) பின்வரும் செயற்பாட்டுத் துறைகளிலிருந்து பெறப்பட்டது. இவை 2017ஆம் ஆண்டுக்கான தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு, கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டுத் துறை	2017 (ரூபா '000)	2018 (ரூபா '000)
இறக்குமதிச் சோதித்தல் செயற்பாடுகள்	215.379	206.701
உற்பத்திச் சான்றுப்படுத்தல், மீன்பிடித்தலைச் சோதித்தல் மற்றும் பதிவு	202.948	190.901
போத்தலிலடைக்கப்பட்ட நீருக்கான கட்டணம்	191	794
முறைமைச் சான்றுப்படுத்தல் செயற்பாடுகள்	67.729	80.992
ஆய்வுகூடச் சோதித்தல் மற்றும் மதிப்பாராய்தல்	171.855	201.286
கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள்	38.229	47.497
கட்டளைகளினதும், வேறு தகவல் செயற்பாடுகளினதும் விற்பனை	13.906	14.484
வேறு	3.707	3.711
	713.954	**746.386**

** சகல மேற்படி தொகைகள் வட்டி வருமானம் புறநீங்கலாக

முன்னைய ஆண்டான 2017ஐப் போன்று, 2018ஆம் ஆண்டுக்கு மூலதனச் செலவினத்தையும், மீளவரும் செலவினத்தையும் உள்ளடக்குவதற்காக திறைசேரியிலிருந்து ஏதேனும் நிதியத்தை இ.க.நி. பெறவில்லை.

2017ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டுரீதியிலான எண்ணிக்கைகளுடன் மீளவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

	2017	2018
மீளவரும் செலவினம்	ரூ. 670.979 மில்லியன்	ரூ. 674.848 மில்லியன்
மூலதனச் செலவினம்	ரூ. 128.796 மில்லியன்	ரூ. 62.150 மில்லியன்

விஞ்ஞானக் கட்டளைகள் பிரிவு

கட்டளைகள் வகுத்தமைத்தல் செயற்பாடுகள்

கட்டமைப்புக்கள், பண்டங்கள், உற்பத்திப்பொருட்கள், பொருள்கள், நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் ஆகியன தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையின் மீது கட்டளைகளைத் தயாரித்தல் அத்துடன் அவற்றை காலத்திற்குக் காலம் மீளாய்தல், மாற்றியமைத்தல் மற்றும் திருத்துதல் அத்துடன் கைத்தொழிலிலும், வர்த்தகத்திலும் தரப்படுத்தலையும் மற்றும் தரக் கட்டுப்பாட்டினையும் மேம்படுத்தல் ஆகியன இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பிரதான நோக்கங்கள் ஆகும். விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தினால் அவசியப்படுத்தப் பட்டவாறு நேரத்திற்கு நேரம் கட்டளைகள் திருத்தப்பட்ட மீளவாயப்படுகின்றன. இ.க.நி.இனாலும் மற்றும் நாட்டிலுள்ள பெருமளவு வேறு தாபனங்களினாலும் மற்றும் அக்கறையிலான தரப்புக்களினாலும் கட்டளைகள் அமுலாக்கப்பட்டு மேம்படு த்தப்படுகின்றது.



பாவனையாளர்களையும், உற்பத்தியாளர்களையும், பயன்படுத்துனர்களையும், அரசாங்க நிறுவனங்களையும் மற்றும் சுதந்திரமான தொழில்நுட்பத் தாபனங்களையும் பிரதிநிதிப்படுத்தும் சகல அக்கறையிலான தரப்புக்களின் தன்னிச்சையிலான சம்பந்தத்துடனும், ஒத்துழைப்புடனும் பங்கெடுப்பிலானதும், ஒளிவுமறைவற்றதும் மற்றும் உசாவுகையிலானதுமான நடைமுறையொன்றின் ஊடாக விஞ்ஞானக் கட்டளைப்படுத்தல் பிரிவினால் தேசியக் கட்டளைகள் வகுத்தமைக்கப்படுகின்றன. மட்டுப்படுத்தப் பட்ட மூலவளங்களுடன் சமாளிக்குமுகமாக முன்மொழிவுகள் மத்தியில் முன்னுரிமைகளை அடையாளங் காண்பதற்காக தேசியக் கட்டளைகளை வகுத்தமைத்தல்/முன்னேற்றுதல் மீது பிரிவின் தற்போதைய நடைமுறை இடம்பெறுகின்றது.

உணவு, கமத்தொழில், இரசாயனங்கள், அலங்கார பொருட்கள், பல்பகுதியம், பொதிப்படுத்தல், கடதாசி, அட்டை, புடவைகள் மற்றும் உடுதுணி, காலணி, தோல் மற்றும் தோல் அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள் போன்ற விடய துறைகளுக்காக பிரிவினால் புதிய கட்டளைகள் விருத்திசெய்யப்பட்டன. இதுவரை சுமார், 3,000 கட்டளைகள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. விவரக்கூற்றுக்கள், சோதனை முறைகள், நடைமுறைகளின் குறியீடு, சொற்பதங்கள் மற்றும் பதங்கள், சின்னங்கள் ஆகியவற்றினுள் இந்த கட்டளைகள் வகுத்தமைக்கப்பட்டன. கட்டளைகளின் முன்னேற்றத்திற்கான அதிகார சபைகள் உட்பட தனியார் மற்றும் அரசாங்கத் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலதரப்பட்ட தரப்புக்களிலிருந்து முன்மொழிவுகளை இ.க.நி. பெறுகின்றது. கட்டளைகளின் வகுத்தமைத்தல் செயற்பாடுகளுக்காக ISO வழிகாட்டல்களையும் மற்றும் தாபிக்கப்பட்ட வழிகாட்டல்களையும் பிரிவு பின்பற்றுகின்றது.

உணவு உற்பத்திப் பொருட்கள் மீதான துறைசார் குழு, இரசாயன மற்றும் பல்பகுதிய தொழில்நுட்பம் மீதான துறைசார் குழு, கடதாசி அட்டை மற்றும் பொதிப்படுத்தல் மீதான துறைசார் குழு, கமத்தொழில் மீதான துறைசார் குழு, புடவை மற்றும் ஆடை மீதான துறைசார் குழு, தோல் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் மீதான துறைசார் குழு ஆகிய 06 துறைசார் குழுக்களை நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காகவும், வழிகாட்டுவதற்காகவும் இ.க.நி. இன் சபை நியமித்துள்ளது.

துறைசார் குழுக்களின் வழிகாட்டலுடன் செயற் குழுக்களை பிரிவு நியமிப்பதுடன், சகல தகவலையும் மற்றும் தொழில்நுட்பத் தரவுகளையும் திரட்டி சிறந்த சாத்தியமான வழியில் சாத்தியமான நிபுணத்துவத்தினால் ஒருப்பாட்டினதும் மற்றும் இணக்கப்பாட்டினதும் ஊடாக தேவைப்பாடுகளை/சாராமாறிகளைத் தீர்மானிக்கின்றது. செயல் குழுக்களுக்கும் மற்றும் துறைசார் குழுக்களுக்கும் தொழில்நுட்ப செயலாளர்களாக பிரிவின் அலுவலர்கள் சேவையாற்றுகின்றார்கள். பணியொன்று ஒதுக்கப்பட்டவுடன் இலக்கிய அளவீடொன்றை அலுவலர்கள் செய்கின்றார்கள். சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்களின் (பிரிவுசார் தலைவர்கள்) மேற்பார்வையின் கீழ் உதவிப் பணிப்பாளர்களினால் தொடர்பான நியமத்தின் அடிப்படை வரைவு தயாரிக் கப்படுகின்றது. செயல் குழு உறுப்பினர்களின் மத்தியில் அடிப்படை வரைவு (முதலாவது வரைவு) பங் கிடப்படுவதுடன், நேரத் திற்கு நேரம் இ.க.நி.இல் உறுப்பினர்கள் ஒன்றுகூடி கலந்துரையாடுவார்கள்.

நடைமுறையின் பொதுசன கருத்துக்கள் கட்டத்தில் விருத்திசெய்யப்பட்ட வரவு கட்டளைகளுக்காக பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்படுகின்றன. ஒவ்வொரு வரைவு கட்டளைக்கும் பொதுசன விநியோக காலம் பொதுவாக இரு மாதங்களாகும். பொதுசன கருத்துக்கள் காலத்தின் போது பெறப்படுகின்ற கருத்துக்கள் பொதுமக்களைப் பாதுகாக்கின்ற அதேவேளை, தேசியப் பொருளாதாரத்திற்கு நன்மைகளை உச்சமாக்குமுகமாக இறுதி அறிக்கையின் தயாரிப்புக்காக கரிசனைக்கு எடுக்கப்படுகின்றன.

WTO/TBT உடன்படிக்கையின் கீழ், சாத்தியமானவிடத்து சர்வதேசக் கட்டளைகளின் மீது அதன் தேசியக் கட்டளைகளைத் தளமாகக் கொண்டிருப்பதற்கான கடப்பாடொன்றை இலங்கை கொண்டுள்ளது. எனவே, தேசியக் கட்டளைகளின் வகுத்தமைத்தலில் சாத்தியமானளவு இ.க.நி.இன் கொள்கை சர்வதேச கட்டளைக்கு அமைவாக விளங்கவேண்டும். ஆக்கவுரிமைத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு இலங்கைக் கட்டளைகளின் அபிவிருத்தியில் மூலத்திலான ஆவணங்களாக பெரிதுமே தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேசக் கட்டளைகள் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கைக் கட்டளைகளாக ISO மற்றும் IEC கட்டளைகளை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை இ.க.நி.இன் கட்டளைகள் வகுத்தமைத்தல் பிரிவுகள் கொண்டுள்ளன. சில தருணங்களில் அவசியப்பட்டால் திரிவுபடுத்தலுக்கு உட்பட்டு அவற்றின் கட்டளைகளை ஏற்றுக்கொள்வதற்காக SARSO, CODEX போன்ற வேறு பிராந்திய மற்றும் சர்வதேச கட்டளைகள் உறுப்புக்களுடன் உடன்படிக்கைகளை இ.க.நி. தாபித்துள்ளது.

சகல வகுத்தமைக்கப்பட்ட வரைவுக் கட்டளைகளும் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகளும் இ.க.நி.இன் சபையின் இறுதியிலான அங்கீகாரத்தினைத் தொடர்ந்து தொடர்பான துறைசார் குழுக்களினால் அங்கீகரிக்கப் பட்ட பின்னர் மட்டுமே வெளியிடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன. பொதுவாக ஒரு மாதத்திற்கு ஒரு தடவை சபைக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

அச்சிடப்பட்ட கட்டளைகள் ஆவணப்படுத்தல், தகவல் பிரிவில் (இ.க.நி.இன் நூலகம்) கொள்வனவுக்கு கிட்டுகின்றன. மேலும் தகவலுக்கு இ.க.நி.இன் இணைய பக்கத்தை பொதுமக்கள் பார்வையிடலாம் (www.slsi.lk).

பொருட்களின் புதிய முன்னேற்றம், தொழில்நுட்பத்தின் அல்லது நடைமுறைகளின் முன்னேற்றம் அத்துடன் பொருளாதாரத்தினதும் வர்த்தகத்தினதும் மாற்றங்கள் ஆகியவற்றுடன் இணங்குமுகமாக பிரிவினால் வெளியிடப்பட்ட கட்டளைகளை மதிப்பாய்தலும் புதுப்பித்தலும் ஒழுங்குசெய்யப்படுகின்றன. 2018ஆம் ஆண்டின் போது, நூற்றி பதினேழு (117) புதிய தேசியக் கட்டளைகள் பிரிவினால் வகுத்தமைக்கப்பட்டு, சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. கடந்த பத்து வருடங்களுக்கு பிரிவினால் நூற்றுக்கு மேற்பட்ட புதிய கட்டளைகள் வெளியிடப்பட்டமை ஒரு விசேட சாதனையாகும். இதில் அறுபத்திநான்கு (64) கட்டளைகள் சர்வதேச (ISO) கட்டளைகளின் புதிய ஏற்றுக்கொள்ளல்களாகும். முப்பத்தியெட்டு (38) கட்டளைகள் மீளவாயப்பட்டன. இவற்றில் இருபத்தெட்டு (28) மீளவாயப்பட்ட சர்வதேச கட்டளைகளின் ஏற்றுக்கொள்ளல்களாகும். அறுபத்தியெட்டு (68) கட்டளைகள் மீளவாயப்பட்டன. சுமார் நாற்பது (40) மேலதிகமான கட்டளைகள் பொதுசன கருத்துரைகள் கட்டம் வரை முன்னேற்றம் அடைந்துள்ளன. பதினொரு (11) திருத்தங்கள் வழங்கப்பட்டதுடன், பதினொரு (11) கட்டளைகள் மீளப்பெறப்பட்டதுடன், பத்து (10) கட்டளைகள் ஒதுக்கிவைக்கப்பட்டன.

கருத்துரைகளைச் சேகரிப்பதற்காக பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட எண்பத்தியாறு (86) செயற்குழுக் கூட்டங்களினதும் மற்றும் பன்னிரண்டு (12) துறைசார் குழுக் கூட்டங்களினதும் மற்றும் பத்து (10) மேலதிக விசேட கூட்டங்களினதும் மற்றும் ஆறு (06) தேசிய சாளரக் குழுக் கூட்டங்களினதும் விளைவே மேற்படி விளைவாகும்.

ISO 9001இன் தேவைப்பாடுகளின் படி ஆவணப் படுத்தப்பட்ட தர முகாமைத்துவ முறைமை (QMS) ஒன்றை பிரிவு பேணுகின்றது. நடைமுறைகள் வழிகாட்டல்கள், படிவங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டு, பேணப்பட்டுள்ளன.

சர்வதேச கட்டளைப்படுத்தல் பணி

ISO (சர்வதேச கட்டளைப்படுத்தல் மீதான தாபனம்)

ISO தொழில்நுட்பக் குழுக்களின் பங்கெடுப்பிலான அல்லது அவதானிப்பிலான உறுப்புரிமையை பெருமளவு பணியாட் உறுப்பினர்கள் கொண்டிருப்பதுடன், வரைவு ISO கட்டளைகள் மீது வாக்களித்து, கருத்துரைத்த அதேவேளை, சர்வதேசக் கட்டளைகளின் வகுத்தமைத்தலிலும் பங்கெடுத்தனர். சீனா, ‘ங்கிரொன்னில் 23.10.2018இலிருந்து 27.10.2018 வரை நடைபெற்ற ISO/TC/216 ஆரம்பக் கூட்டத்திலும் மற்றும் அதன் செயற்குழுக் கூட்டத்திலும் ஓர் அலுவலர் பங்கெடுத்தார்.

பிராந்தியத் தரப்படுத்தல் பணி - SARSO (தென் ஆசியப் பிராந்தியக் கட்டளைப்படுத்தல் தாபனம்)

கட்டளைப்படுத்தலைக் கையாளும் SAARCஇன் நிபுணத்துவ உறுப்பொன்றே SARSO ஆகும். இதன் செயலகம் 116/A, Tejgaon Industrial Area Dhaka-1208, Bangladeshஇல் அமைந்துள்ளது. பணிப்பாளர் நாயகம் ஒருவரினால் தலைமை தாங்கப்பட்ட வாழ்க்கைத்தொழில் பணியாளரையும் மற்றும் பொதுசேவைகள் பணியாளரையும் கொண்டதாக செயலகம் விளங்குகின்றது. எட்டு SAARC நாடுகளின் தேசியக் கட்டளை உறுப்புக்களே (NSBகள்) SARSOஇன் அங்கத்துவ உறுப்புக்களாகும்.

SARSOஇன் துறைசார் தொழில்நுட்பக் குழுக்களினால் ஒழுங்குபடுத்தப்படும் தொழில்நுட்பக் கூட்டங்களில் பங்கெடுப்பதன் மூலமும் அத்துடன் கருத்திட்ட ஒருங்கிணைப்பாளராகச் சேவையாற்றுவதன் ஊடாகவும் பிரிவின் தொழில்நுட்பப் பணியாளர்கள் இச் செயற்பாடுகளில் தீவிரமாகச் சம்பந்தப்படுகின்றார்கள். 2018ஆம் ஆண்டின் போது, பிரிவினால் எழுபத்திநான்கு (74) கருத்திட்டங்கள் கையாளப்பட்டன.

உணவு, கமத்தொழில் இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திப்பொருட்கள் மற்றும் புடவைகள், ஆடைகள் மற்றும் தோல் ஆகியன தொடர்பில் முன்னைய வருடங்களைப் போன்று இலங்கையில் நடைபெற்ற தொழில்நுட்பக் கூட்டங்களை இ.க.நி. விருந்தோம்பியது. ஏனைய SAARC நாடுகளினால் விருந்தோம்பப்பட்ட கூட்டங்களிலும் தொழில்நுட்பப் பணியாளர்கள் பங்கெடுத்தனர். இரசாயன மற்றும் அலங்கார உற்பத்திப்பொருட்கள் மீதான மூன்றாவது துறைசார் குழுக் கூட்டத்தில் இரு அலுவலர்கள் பங்கெடுத்ததுடன் (02 நாட்கள்), பாகிஸ்தானில் நடைபெற்ற உணவினதும் கமத்தொழிலினதும் மீதான ஏழாவது துறைசார் தொழில்நுட்ப குழுவில் இரு (02) வேறு அலுவலர்கள் பங்கெடுத்தனர்.

கட்டளைகள் மேம்படுத்தல்/விழிப்பியல் செயற்றிட்டங்கள்/கருத்தரங்குகள்

கட்டளைப்படுத்தல் தேவைகள் மீதான தகவலைத் திரட்டுவதற்காக UNIDOஇன் உதவியுடன் பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் வாசனைத்திரவிய துறையின் பயனுரித்தாளர்களுக்காக விழிப்பியல் செயற்றிட்டம் நடத்தப்பட்டது. வாரியப்பொலவில் பாடசாலையிலுள்ள மாணவர்களுக்காக நடைபெற்ற GAP மீதான விழிப்பியல் செயற்றிட்டத்திற்கு பங்களிக்கப்பட்டது. விதார்த்த தொழில்நுட்ப கிளினிக் செயற்றிட்டத்திற்கும் ஆதரவளிக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டில் சுற்றுலா மற்றும் தொடர்பான செயற்பாடுகளுக்கு முதலாவது தேசிய கட்டளையை (அதாவது SLS ISO 21101: 2017 – துணிகர சுற்றுலா துறை – பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைத் தேவைப்பாடுகள்) இலங்கை கட்டளைகள் நிறுவனம் (இ.க.நி.) வெளியிட்டது. முன்னோடி கருத்திட்டமொன்றின் ஊடாக இந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டளையின் முன்னேற்றமானது 2018இல் பாசிக்குடாவில் மூன்று (03) நாட்களின் போது நடத்தப்பட்டது. நான்கு அலுவலர்கள் பங்கெடுத்தனர். தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார அமைச்சின் மத்திய கருத்திட்ட முகாமைத்துவ அலகு

(CPMU), இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA), பிரதமரின் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகம் (PDO), கேச, அழகு பராமரிப்பு கைத்தொழில் ஆகியவற்றிலிருந்து உதவியுடன் இ.க.நி.இனால் இது ஒழுங்குபடுத்தப் பட்டது. இது IDBஇன் உதவியுடன் தயாரிப்பாளர்கள் மத்தியில் முன்னேற்றப்பட்டது.

UNIDO கருத்திட்டங்கள் - வாசனைத்திரவியங்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு SME துறைக்காக ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டங்களினதும் மற்றும் ஆற்றலளவை முன்னேற்றும் செயற்றிட்டங்களினதும் தீவிரமான பங்கெடுப்பின் ஊடாக பங்களிக்கப்பட்டது. FAO கருத்திட்டம் - கொழும்பு நகரப் பிராந்திய உணவு பாதுகாப்பு (CRFS) கருத்திட்டம் - கொழும்பு மாநகர சபையினதும் (CMC) மற்றும் சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தினதும் (IWMI) கூட்டு முயற்சியில் ஐக்கிய நாடுகளின் உணவு விவசாயத் தாபனத்தினால் (FAO) ஒழுங்குசெய்யப்பட்ட உசாவுகை செயலமர்வுகளுக்கும், கூட்டங்களுக்கும் மற்றும் பின்தொடர் குவியக் குழுக் கூட்டங்களுக்கும் தீவிரமாகப் பங்களிக்கப்பட்டது.

வேறு பிரிவுகளுக்கான சேவைகள்

இ.க.நி.இன் வேறு பிரிவுகளுக்கு ஆதரவளிப்பதற்காக மூலவள நபர்களாகவும், தணிக்கையாளர்களாகவும் மற்றும் மதிப்பீட்டாளர்களாகவும் பணியாளர் சேவையாற்றினர். முறைமைகள் சான்றளிப்பு பிரிவினாலும் மற்றும் உற்பத்திப் பொருட்கள் சான்றளிப்பு பிரிவினாலும் ஒழுங்குபடுத்தப்பட்ட தணிக்கைகளை மேற்கொள்வதற்காக ISO 9001, ISO 22000, ISO 14000, OSHAS ஆகியன மீது தணிக்கையாளர் தகுதிகளைக் கொண்டதும் GMP மீது அறிவையும் மற்றும் அனுபவத்தையும் கொண்டதுமான பணியாளரினால் 200 மனித நாட்கள் செலவழிக்கப்பட்டன. தர உறுதிப்படுத்தல் பிரிவின் இறக்குமதி சோதனை திட்டத்தின் கீழ் கூருணர்வு மதிப்பாய்வுக்காக தகரத்திலடைக்கப்பட்ட மீன் மாதிரிகளின் மதிப்பீட்டாளர்களாக சில பணியாட் உறுப்பினர்கள் சேவையாற்றியதுடன், சுமார் 60 மாதிரிகள் மதிப்பிடப்பட்டன. பயிற்சிப் பிரிவுக்காக மூலவள நபர்களாக பணியாட் உறுப்பினர்களினால் சுமார் 50 மனித மணித்தியாலங்களைக் கொண்ட விரிவுரைகள் பொறுப்பேற்கப்பட்டன. வேறு பிரிவுகளினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டங்களிலும், பொருட் காட்சிகளிலும் பணியாட் உறுப்பினர்கள் பங்கு எடுத்ததுடன், 2018ஆம் ஆண்டின் இரு தருணங்களில் தேசிய தர விருது செயற்றிட்டத்திற்காக தாபனங்களின் மதிப்பீட்டில் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் களினால் சேவைகள் அளிக்கப்பட்டன.

வெளியார் தாபனங்களுக்கான சேவைகள்

ஆண்டு முழுவதும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இலங்கை இராணுவம், விசேட அதிரடிப் படை, இலங்கை பொலிஸ், சுகாதார அமைச்சின் தேசிய குறியீட்டுக் குழுக்கள் அலங்கார கருவிகள், ஒளடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, தேசிய உர செயலகம், வாசனை சபை அத்துடன் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகள் ஆகியவற்றின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் போன்ற பெருமளவு குழுக்களின் கூட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுப்பதன் ஊடாக வேறு தாபனங்களுக்கு பிரிவின் சிரேஷ்ட பணியாளர் பணியாற்றியதுடன் அறிவை பரப்பியதுடன் கூட்டங்களி லும் பங்கெடுத்தனர். இலங்கையின் தேசிய ஏற்றுமதி உபாயத்தின் (NES) ஆலோசனைக் குழுக்கள், விசேட செயற்குழுக் கூட்டங்கள் ஆகியனவற்றின் ஊடாக பங்கெடுப்பினையும் அத்துடன் அறிவின் பங்களிப்பினதும் ஊடாக ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு (EDB) பங்களிக்கப்பட்டதுடன், பெருமளவு நேர்முகங்காணல் குழாம்களிலும் மற்றும் ஏற்றுமதி, வர்த்தகம் தொடர்பான கூட்டங்களிலும் சேவையாற்றப்பட்டது. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அலங்காரப் பொருட்களின் பதிவுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை ஒழுங்குபடுத்துவதற்காக/ மதிப்பாய்வதற்காக NMRA உடன் (தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபை) ஒருங்கிணைக்கப் பட்டது.

அபிவிருத்தி உபாயங்கள், சர்வதேச வர்த்தக அமைச்சு மற்றும் வர்த்தக திணைக்களம் ஆகியவற்றினால் ஒழுங்குபடுத்தப்பட்ட TBT மற்றும் SPS மீதான தேசிய உப குழுக்களின் உறுப்பினர்களாக பங்கெடுத்ததுடன், வர்த்தக உடன்படிக்கைகள் மீதான ஆவணங்களின் மதிப்பாய்வுக்காக பங்களித்தனர். அறிவை பங்களிப்பதன் மூலம் கட்டளைப்படுத்தல் இணக்க மதிப்பீட்டினதும் மற்றும் வர்த்தகத்தினதும் துறையிலும் வர்த்தகத்தினதும் துறையில் ரஷ்யா, சிங்கப்பூர், துருக்கி போன்ற நாடுகளுடன் FTAஐ வரைவதில் சம்பந்தம் - வர்த்தகத் துறையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டளைப்படுத்த லினதும் மற்றும் வர்த்தகத்தினதும் தொடர்பான கூட்டங்களில் பங்கெடுக்கப்பட்டது.

பணியாளரின் ஆற்றலளவு முன்னேற்றம் (கடல் கடந்த பயிற்சி/தணிக்கை)

2018இல் தாய்லாந்தில் GAP மீதான ஆய்வு வருகை தரல் ஒன்றில் (05 நாட்கள்) ஒரு சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (SDD) பங்கெடுத்தார். இன்னொரு SDD 13.08.2018 முதல் 16.08.2018 வரை 04 நாட்களின் போது இந்தோனேஷியாவில் நடைபெற்ற தேசிய கட்டளைகள் முன்னேற்றக் கருத்திட்டங்களையும் மற்றும் திட்டங்களையும் நிருவகிப்பது மீதான ISO பிராந்திய பயிற்சியில் பங்கெடுத்ததுடன், 17.09.2018 முதல் 19.09.2018 வரை 03 நாட்களின் போது சீனாவில் நடைபெற்ற 2ஆவது சீன-தென் ஆசிய கட்டளைப்படுத்தல் ஒத்துழைப்பு மகாநாட்டிலும் பங்கெடுத்தார். இந்தியாவில் நடைபெற்ற (05 நாட்கள்) UTZ/AA புதிய விருத்தாந்தம் மற்றும் ஈடுபாடு அமர்வு மீது இரு உதவி பணிப்பாளர்கள் (தொழில்நுட்பம்) பங்கெடுத்தனர். இந்தியாவில் (05 நாட்கள்) உலகளாவிய சுகாதாரப் பராமரிப்பு உற்பத்திப் பொருட்களின் அலுவலர் ஒருவரினால் உற்பத்திச் சான்றளிப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவில் நடைபெற்ற ICTAஇன் 10ஆவது சுற்றுக்களில் SPS மற்றும் TBT தொடர்பான கலந்தாய்வுகளில் பணிப்பாளர் பங்கெடுத்தார். இ.க.நி.இன் பயிற்சிப் பிரிவினால் நடத்தப்பட்ட ISO 9001 தலைமை தணிக்கையாளர் செயற்றிட்டம் மீது 2018 டிசம்பர் 17 முதல் 18 வரை நடைபெற்ற உள்நாட்டுப் பயிற்சியொன்றில் ஒரு உதவிப் பணிப்பாளர் பங்கெடுத்தார். இந்தியாவில் உலகளாவிய சுகாதார பராமரிப்பு உற்பத்திப்பொருட்களில் தணிக்கை ஒன்றில் (05 நாட்கள்) ஒரு உதவிப் பணிப்பாளர் பங்கெடுத்தார்.

விஞ்ஞான எந்திரவியல் கட்டளைகள் பிரிவு

தகவல் தொழில்நுட்பம், மின்சார சாதனங்களுக்கான சக்தி செயற்றிறன் சுட்டித்துண்டிடுதல் திட்டத்தின் செயற்பாடு, கட்டிட நிருமாணங்கள், கட்டிடங்களின் பராமரிப்புகள் மற்றும் வேலைத்தலச் செயற்பாடுகள் ஆகியன உட்பட சகல எந்திரவியல் பிரிவுகளில் தேசியக் கட்டளைகளை வகுத்தமைப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் எந்திரவியல் கட்டளைப்படுத்தல் பிரிவு பொறுப்பானதாகும்.

மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது, இருபத்தியிரண்டு (22) புதிய இலங்கைக் கட்டளைகள் விருத்தி செய்யப்பட்டதுடன், ஐந்து (05) கட்டளைகள் மீளவாயப்பட்டன. அத்துடன் தேசிய கட்டளைகளாக பதினெட்டு (18) சர்வதேசக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நடைமுறையிலான கட்டளைகளுக்கு இரண்டு (02) திருத்தங்கள் வழங்கப்பட்டன. இக்கட்டளைகளை முடிவாக்குவதற்காக இருபத்தியெட்டு (28) துறைசார் குழுக் கூட்டங்களும், முப்பத்தியிரண்டு (32) செயற் குழுக் கூட்டங்களும் நடைபெற்றன. வேறு அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதை எந்திரவியல் பிரிவு தொடர்ந்ததுடன், கட்டளைகளின் முன்னேற்றத்திற்கு தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக் கூட்டங்களிலும் பங்கெடுத்தது.

உற்பத்திச் சான்றளிப்பு செயற்பாடுகளில் தணிக்கையாளர்களாக பங்கெடுப்பதன் மூலம் SLS உற்பத்தி சான்றளிப்பு செயற்பாடுகளுக்கும் பிரிவின் எந்திரவியலாளர்கள் பங்களித்தனர்.

குடித்தனப் பிரயோகங்களில் சக்தி செயற்றிறனான மின்சார உபகரணங்களைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்காக சக்தி செயற்றிறன் சுட்டித்துண்டிடுதல் திட்டத்தின் செயற்பாடு தொடரப்பட்டது. நாற்பத்தியொரு (41) புதிய மற்றும் இருபது (20) புதுப்பித்தல்கள் உட்பட மொத்தமாக அறுபத்தியொரு (61) சக்தி செயற்றிறன் சான்றுப்பத்திரங்கள் இறுக்கமான வெள்ளொளிர் விளக்குக்கு (CFL) வழங்கப்பட்டன. ஒளி வெளியேற்றும் டியோட்டுக்கு (LED) மொத்தமாக முப்பத்தியொரு (31) குறைந்தபட்ச சக்தி செயற்றிறன் சான்றுப்பத்திரங்கள வழங்கப்பட்டன

அ) வேறு தாபனங்களுடன் கட்டளைகளை முன்னேற்றும் பணி

பின்வருமாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளபடி நிறுவனங்களின் ஆதரவுடன் கட்டளைகளை விருத்தி செய்தல் தொடர்ந்தது:

1. இலங்கை நிலைத்திருத்தல் சக்தி அதிகார சபையுடன் மின்சார உபகரணங்களுக்கான சக்தி செயற்றிறன் வீதப்பாட்டுக் கட்டளைகள்.

2. இலங்கை நிலைத்திருத்தல் சக்தி அதிகார சபையுடன் LEDக்கு குறைந்தபட்ச சக்தி செயற்றிறன் திட்டத்தின் (MEPS) அமுலாக்கம்.

3. People in Need Organization என்ற தாபனத்துடன் வீட்டு உயிரக வாயு முறைமைக்கான நடைமுறையின் நியதியின் மீளாய்வு.

மேற்படி பிரதான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, வெளியார் தாபனங்களுக்கும் மற்றும் இ.க.நி.இன் வேறு பிரிவுகளுக்கும் ஆலோசனைச் சேவைகளை பிரிவு வழங்கியது. இ.க.நி. உட்பட அரசாங்கத் தாபனங்களில் அரசாங்க கேள்வி மதிப்பாய்வு நடைமுறையில் உதவியளிப்பதற்காக பெருமளவு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்கள் மற்றும் கொள்வனவு குழுக்கள் ஆகியன மீது பிரிவின் எந்திரவியலாளர்கள் சேவையாற்றினார்கள்.

இ.க.நி.இனால் நடத்தப்பட்ட பயிற்சி செயற்றிட்டங்களுக்காக மூலவள நபர்களாக பிரிவிலுள்ள எந்திரவியலாளர்கள் பணியாற்றியதுடன், தர முகாமைத்துவ முறைமை (ISO 9001), சூழல் முகாமைத்துவ முறைமை (ISO 14001), தொழில்நிலை சுகாதார, பாதுகாப்பு முறைமை (OSHAS 18001), சக்தி முகாமைத்துவ முறைமைகள் (ISO 50001), மற்றும் தேசிய தர விருதுக்கான தாபனங்களின் மதிப்பீடு ஆகியவற்றுக்கு தணிக்கையாளர்களாகவும் பங்கெடுத்தனர்.

ஆ) கட்டிட நிருமாண மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள்

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, வேலைத்தலம் உட்பட மேம்படுத்தல்களிலும் மற்றும் பராமரிப்பு வேலைக்கான நிருமாண வேலையிலும் பிரிவிலுள்ள எந்திரவியலாளர்களின் உதவியுடன் இச் சேவைகளைப் பிரிவு தொடர்ந்தும் வழங்கியது. ஆண்டின் போது இ.க.நி. கட்டிடத்திற்கு தீந்தையடித்தல் முடிக்கப்பட்டுள்ளது.

இ) வாகனப் பராமரிப்பு

வாகனங்களின் தொகுதிக்கான சேவைகளினதும், பராமரிப்பினதும் மற்றும் பழுதுபார்ப்பினதும் ஏற்பாட்டினைப் பிரிவு தொடர்ந்தது.

தர உறுதிப்படுத்தல் பிரிவு

கைத்தொழிலினாலும், வர்த்தகத்தினாலும் வழங்கப்படும் உற்பத்திப்பொருட்களினதும், சேவைகளினதும் தரத்தைக் கண்காணிப்பதற்காக ஒரு தொகையிலான முக்கியமான திட்டங்களை இப்பிரிவு தொழிற்படுத்துகின்றது. தோதான கட்டுப்பாடுகளையும், சிறந்த விளைவுகளையும் உறுதிப்படுத்துவதற்காக, ஆண்டின் போது மதிப்பாய்வின் கீழான இத்திட்டங்கள் மேலும் பலப்படுத்தப்பட்டன.

அ. தொழிற்பாட்டில் உள்ள திட்டங்கள்

அ. இறக்குமதிச் சோதனை

இத் திட்டத்தின் கீழ் கண்காணிக்கப்பட்ட மொத்த விடயங்களின் எண்ணிக்கை 123 ஆகும்.



அறிவித்தல்களின் ஒன்லைன் சமர்ப்பணமும் மற்றும் இறக்குமதி சோதனை திட்டத்தின் ஒன்லைன் செயற்பாடும் 2018 நொவம்பரில் இருந்து ஆரம்பித்தது.

ஆண்டின் போது, 19,305 அனுப்புப் பொருட்பொதிகள் கண்காணிக்கப் பட்டதுடன், 10,301 அனுப்புப் பொருட் களிலிருந்து மாதிரிகள் பெறப்பட்டன. ஆண்டின் போது இச் செயற்பாட்டிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 193 மில்லியன் என்ற இலக்குக்கு எதிராக ரூபா 208 மில்லியனாகும்.

திட்டத்தின் சக்திமிக்கதன்மையையும், செயல் திறனையும் மேம்படுத்தும் நடவடிக்கை யொன்றாக, தயாரிப்புத் தாபனங்களின்/ ஆய்வுகூடங்களின் பதிவு 2018ஆம் ஆண்டின் போது மேலும் விஸ்தரிக்கப்பட்டதுடன், இறக்குமதிச் சோதனைத் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 50 தயாரிப்பாளர்கள் உள்ளனர்.

ஆ. முந்திரிப்பருப்புக்களின் ஏற்றுமதிக்கு முன்னரான தரச் சான்றளிப்பு

முந்திரிப்பருப்புகளுக்கு கட்டாய அடிப்படையில், இத் திட்டம் தொழிற்படுத்தப்பட்டது. தற்போதைய திட்டத்தின் கீழ், 2018ஆம் போது வேண்டுகோள்கள் விடுக்கப்படாதபடியினால், 2018ஆம் ஆண்டின் போது முந்திரிப்பருப்பு அனுப்புப்பொருட்பொதிகள் பரிசோதிக்கப்படவில்லை.

ஆ. பிரிவின் முழுமையான வருமானம்

பிரிவானது ரூபா 193 மில்லியன் கொண்ட இலக்குக்கு எதிராக ரூபா 208 மில்லியன் கொண்ட முழுமையான வருமானத்தைப் பதிவு செய்தது. இது 2018ஆம் ஆண்டுக்கு இ.க.நி.இன் இலக்கு வருமானத்தில் 29% என்ற உறுதியான மாறலொன்றைச் சாதிப்பதை நோக்கி பிரதானமாக பங்களித்தது.

முறைமைகள் சான்றளிப்புப் பிரிவு

இ.க.நி.இன் முறைமைச் சான்றளிப்புப் பிரிவானது பின்வருமாறு பதினொரு முகாமைத்துவ முறைமைகள் சான்றளிப்புத் திட்டங்களை தற்போது தொழிற்படுத்துகின்றது:

- ISO 9001 தர முகாமைத்துவ முறைமை
- ISO 14001 சூழல் முகாமைத்துவ முறைமை
- ISO 22000 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை
- HACCP உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை
- OHSAS 18001சான்றளிப்புத் திட்டம்
- GMP சிறந்த தயாரிப்புச் செயற்பாடுகள் திட்டம்
- பெரும் சந்தை சான்றளிப்புத் திட்டம்
- சேதனச் சான்றளிப்புத் திட்டம்
- ISO 50001 சக்தி முகாமைத்துவ முறைமை சான்றளிப்புத் திட்டம்
- உணவுக்கும், குடிபானத்திற்கும் மரக்கறி முறைமைச் சான்றளிப்பு
- விதாத முறைமைச் சான்றளிப்புத் திட்டம்
- பச்சை இல்ல வாயு சரிபார்த்தல் மற்றும் தொகைரீதிப்படுத்தல்

2018ஆம் ஆண்டின் போது, இலங்கை தத்துவமளிப்பு சபை (SLAB) மற்றும் நெதர்லாந்து RvA ஆகியவற்றிலிருந்து QMS, FSMS, HACCP மற்றும் EMS ஆகியவற்றுக்கான தத்துவமளிப்பு நிலையை முறைமைச் சான்றளிப்பு பிரிவினால் பராமரிக்கக்கூடியதாகவிருந்தது.

ISO 9001: 2008/ISO 9001: 2015 தர முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம்

2018ஆம் ஆண்டின் போது, ISO 9001 தர முறைமைகள் சான்றளிப்பிற்கு 56 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 56 தகுந்தளவு தணிக்கைகளும், 46 கட்டம் 1 தணிக்கைகளும், 30 கட்டம் 2 தணிக்கைகளும், 131 கண்காணிப்புத் தணிக்கை களும், 148 மீள்-மதிப்பீடுகளும் மேற்கொள்ளப் பட்டன. 2018ஆம் ஆண்டின் போது, 53 புதிய சான்றுப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இரு தணிக்கையாளர்களைத் தலைமை தணிக்கையாளர் அந்தஸ்துக்கும், ஒரு அவதானிப்பாளரை தணிக்கையாளர் அந்தஸ்துக்கும் தரமுயர்த்துவதன் மூலம், தர முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டது. ஆண்டின் போது, RvA தத்துவமளிப்புத் திட்டத்தின் கீழ் பத்தொன்பது நோக்கெல்லைத் துறைகளைப் பராமரிப்பது சாத்தியப்பட்டது.

2018ஆம் ஆண்டின் போது, அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், பேரவைகள் ஆகியன உட்பட பலதரப்பட்ட தாபனங்களில் ஒரு தொகை மேம்படுத்தல் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன்,அதன் விளைவாக அவற்றில் பெரும்பாலானவற்றை இ.க.நி.இனால் சான்றளிக்க முடிந்தது.

தத்துவமளிப்பு உறுப்புக்களான RvA மற்றும் SLAB ஆகியன ஒருங்கிணைந்த கண்காணிப்பு தணிக்கைகளை மேற்கொண்டன. இரு தத்துவமளிப்பு தணிக்கைகளின் விரிவெல்லையின் கீழ் அலுவலக மதிப்பாய்வும், சாட்சிய தணிக்கைகளும் உள்ளடக்கப்பட்டன. ISO 9001: 2015 புதிய வாசகம் மீது சாட்சிய தணிக்கைகள் அடிப்படையைக் கொண்டிருந்தன.

ISO/IEC 17021: பாகம் 1: 2015க்கு எதிராக ஒரு வருடத்தைக் கொண்ட மேலும் காலமொன்றுக்கு தத்துவமளிப்பு நிலையுடன் தொடர்வதற்கு இ.க.நிறுவனத்தை RvA மற்றும் SLAB ஆகியன பரிந்துரைத்தன.

ISO 14001: 2004/1SO 14001: 2015 சூழல் முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம்

2018ஆம் ஆண்டின் போது, ISO 14001 திட்டத்தின் கீழ், 28 விண்ணப்பங்கள் கிடைத்ததுடன், 28 தகுந்தளவு தணிக்கைகளும், 22 கட்டம் 1 தணிக்கைகளும், 22 கட்டம் 2 தணிக்கைகளும், 32 கண்காணிப்புத் தணிக்கைகளும் மற்றும் 44 மீள்-சான்றுப்படுத்தல் தணிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டதுடன், 32 புதிய சான்றுப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

தலைமை தணிக்கையாளர் நிலைக்கு ஒரு தணிக்கையாளரையும், தணிக்கையாளர் நிலைக்கு ஒரு அவதானிப்பாளரையும் தரமுயர்த்துவதன் மூலம், சூழல் முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டது.

முறைமைகள் சான்றளிப்புப் பிரிவு

2018ஆம் ஆண்டின் போது, இலங்கை தத்துவமளிப்பு சபை (SLAB) மற்றும் நெதர்லாந்து RvA ஆகியவற்றிலிருந்து QMS, FSMS மற்றும் HACCP & EMS ஆகியவற்றுக்காக தத்துவமளிப்பிலான நிலையைப் பேணுவதற்கு முறைமைகள் சான்றளிப்பு பிரிவினால் இயலக்கூடியதாக இருந்தது.

ISO 22000 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, 30 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. 30 தகுந்தளவு தணிக்கைகளும், 22 கட்டம் 1 தணிக்கையும், 20 கட்டம் 2 தணிக்கைகளும், 78 கண்காணிப்புத் தணிக்கைகளும் மற்றும் 52 மீள்-மதிப்பீட்டுக் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன. மேலும், 22 புதிய சான்றுப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

ஒரு தணிக்கையாளரை தலைமை தணிக்கையாளர் அந்தஸ்துக்கும், ஒரு அவதானிப்பாளரை தணிக்கையாளர் அந்தஸ்துக்கும் தரமுயர்த்துவதன் மூலம், உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டது.

தத்துவமளிப்பு உறுப்புக்களான RvA மற்றும் SLAB ஆகியன ஒருங்கிணைந்த கண்காணிப்பு தணிக்கைகளை மேற்கொண்டன. இரு தத்துவமளிப்பு தணிக்கைகளின் விரிவெல்லையின் கீழ் அலுவலக மதிப்பாய்வும், சாட்சிய தணிக்கைகளும் உள்ளடக்கப்பட்டன. ISO 22000 கட்டளை மீது சாட்சிய தணிக்கைகள் அடிப்படையைக் கொண்டிருந்தன.

ISO/IEC 17021: பாகம் 1: 2015க்கு எதிராக ஒரு வருடத்தைக் கொண்ட மேலும் காலமொன்றுக்கு தத்துவமளிப்பு நிலையுடன் தொடர்வதற்கு இ.க.நிறுவனத்தை RvA மற்றும் SLAB ஆகியன பரிந்துரைத்தன.

HACCP உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, 19 விண்ணப்பங்கள் கிடைத்தன. 19 தகுந்தளவு தணிக்கைகளும், 22 கட்டம் 1 தணிக்கைகளும், 20 கட்டம் 2 தணிக்கைகளும், 89 கண்காணிப்புத் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மற்றும் 55 மீள்-மதிப்பீட்டுத் தணிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டதுடன், 17 புதிய சான்றுப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

தலைமை தணிக்கையாளர் நிலைக்கு ஒரு தணிக்கையாளரையும், தணிக்கையாளர் நிலைக்கு ஒரு அவதானிப்பாளரையும் தரமுயர்த்துவதன் மூலம் HACCP உணவுப் பாதுகாப்பு முறைமைச் சான்றளிப்பு திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டது.

தத்துவமளிப்பு உறுப்புக்களான RvA மற்றும் SLAB ஆகியன ஒருங்கிணைந்த கண்காணிப்பு தணிக்கைகளை மேற்கொண்டன. இரு தத்துவமளிப்பு தணிக்கைகளின் விரிவெல்லையின் கீழ் அலுவலக மதிப்பாய்வும், சாட்சிய தணிக்கைகளும் உள்ளடக்கப்பட்டன. ISO 14001: 2015 புதிய வாசகம் மீது சாட்சிய தணிக்கைகள் அடிப்படையைக் கொண்டிருந்தன.

ISO/IEC 17021: பாகம் 1: 2015க்கு எதிராக ஒரு வருடத்தைக் கொண்ட மேலும் காலமொன்றுக்கு தத்துவமளிப்பு நிலையுடன் தொடர்வதற்கு இ.க.நிறுவனத்தை RvA மற்றும் SLAB ஆகியன பரிந்துரைத்தன.

OHSAS சான்றளிப்புத் திட்டம்

இந்த சான்றளிப்புத் திட்டத்தின் கீழ், 2018ஆம் ஆண்டின் போது 8 விண்ணப்பங்கள் கிடைத்ததுடன், 08 தகுந்தளவு தணிக்கைகளும், 17 கட்டம் 1 தணிக்கைகளும், 7 கட்டம் 2 தணிக்கைகளும் மற்றும் 31 கண்காணிப்புத் தணிக்கைகளும், 10 மீள்-சான்றளிப்புத் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2018ஆம் ஆண்டின் போது, 11 புதிய கம்பனிகள் சான்றுபடுத்தப்பட்டன.

GMP-சிறந்த தயாரிப்புச் செயற்பாடுகள் திட்டம்

ஆண்டின் போது, 188 விண்ணப்பங்கள் கிடைத்ததுடன், 188 தகுந்தளவு தணிக்கைகளும், 92 கட்டம் 1 தணிக்கைகளும், 32 கட்டம் 2 தணிக்கைகளும் மற்றும் 61 கண்காணிப்புத் தணிக்கைகளும், 53 மீள்-சான்றளிப்புத் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 65 புதிய சான்றுப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகள் மத்தியில், GMP திட்டத்தை மேம்படுத்துவதற்காக பெருமளவு மாவட்டங்களில் காவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கூட்டுமுயற்சியுடன் முறைமைகள் சான்றளிப்புப் பிரிவு பெருமளவு மேம்பாட்டிலான செயற்றிட்டங்களை நடத்தியது.

சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகள் துறையில் GMP முறைமைகளை மேம்படுத்துவதற்காக விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட GMP சான்றுப்படுத்தல் செயற்றிட்டம் தொடர்ந்தது.

முறைமைகள் சான்றளிப்புப் பிரிவு

பெரும் சந்தை சான்றளிப்புத் திட்டம்

பெரும் சந்தை சான்றளிப்புத் திட்டத்தை அமுலாக்குவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டதுடன், ஆண்டின் போது கீல்ஸ் சுப்பர் மார்க்கெட்டின் 99 விற்பனைக்கூடங்கள் சான்றளிக்கப்பட்டன. 12 கட்டம் 1 தணிக்கை, 7 கட்டம் 2 தணிக்கை மற்றும் 35 கண்காணிப்புத் தணிக்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. 22 புதிய சான்றுப்பத்திரங்கள்வழங்கப்பட்டன.

சேதனச் சான்றளிப்பு

2 கட்டம் 1 தணிக்கை மற்றும் 0 கட்டம் 2 தணிக்கை ஆகியன மேற்கொள்ளப்பட்டதுடன், ஒரு புதிய சான்றுப்பத்திரம் வழங்கப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் நடத்தப்பட்ட விழிப்பியல் செயற்றிட்டங்களில் முறைமைகள் சான்றளிப்பு பிரிவின் அலுவலர்கள் பங்கெடுத்தனர்.

சக்தி முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம்

மீளவாய்வதற்காக இரண்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன், 02 தகுந்தளவு கணக்காய்வு, 02 கட்டம் 1 தணிக்கைகள், 01 கட்டம் 02 தணிக்கைகள், 5 கண்காணிப்புத் தணிக்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. மூன்று புதிய சான்றுப்பத்திரம் வழங்கப்பட்டது.

மரக்கறி உணவு, குடிபான முறைமை சான்றளிப்பு

மதிப்பாய்வதற்காக ஒரு விண்ணப்பம் கிடைத்தது. 01 தகுந்தளவு தணிக்கை, 1 கட்டம் மேற்கொள்ளப்பட்டது.

விதாத முறைமை சான்றளிப்புத் திட்டம்

மதிப்பாய்வதற்காக ஒரு விண்ணப்பம் கிடைத்தது.

பச்சை இல்ல வாயு சரிபார்த்தல் மற்றும் தொகைரீதிப்படுத்தல்

சரிபார்த்தலுக்காக இரு விண்ணப்பங்கள் கிடைத்தன. 02 தகுந்தளவு தணிக்கை, 02 கட்டம் 1 தணிக்கைகள், 02 கட்டம் 2 தணிக்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டதுடன், 02 சரிபார்த்தல் சான்றுப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

வருமானம்

2018ஆம் ஆண்டின் போது, முறைமைச் சான்றளிப்புப் பிரிவு ரூபா 70,000,000.00 என்ற இலக்குக்கு எதிராக ரூபா 87,980,681 கொண்ட வருமானத்தைத் தோற்றுவித்துள்ளது.

வேறு ஏதேனும் செயற்பாடுகள்

1. பசுமை இல்ல வாயு வெளியேற்ற (GHG) சரிபார்த்தலுக்கான புதிய சான்றளிப்புத் திட்டம் தாபிக்கப்பட்டது.

2. FSSC 22000 சான்றளிப்பு திட்டத்தை அமுலாக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது.

3. முகாமைத்துவ முறைமைகள் தணிக்கையாளர்களை அறிவூட்டுவதற்காக பலதரப்பட்ட தலைப்புக்கள் மீது ஒரு தொகையைக் கொண்ட பயிற்சி செயற்றிட்டங்களை முறைமைகள் சான்றளிப்புப் பிரிவு நடத்தியது.

4. உற்பத்திச் சான்றளிப்பு பிரிவு QA பிரிவு, பயிற்சிப் பிரிவு, கட்டளைகள் வகுத்தமைத்தல் பிரிவு மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு ஆகியவற்றுக்கு தமது சேவைகளை பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் வழங்கினர்.


5. உறுப்பினர்களாகவும், வாக்காளர்களாகவும் சேவையாற்றுவதன் மூலம், ISO தொழில்நுட்பக் குழுக்களுக்கான தொழில்நுட்ப உள்ளீடுகளை முறைமைகள் சான்றளிப்புப் பிரிவைச் சேர்ந்த பெருமளவு அலுவலர்கள் வழங்கினார்கள்.

6. சூழல் முகாமைத்துவம் மீதான தேசிய சாளரக் குழுவுக்கான செயலாளராக பணிப்பாளர் (SC) தொடர்ந்தார்.

7. அமைச்சுக்களின் பெருமளவு ஆலோசனைக் கூட்டங்களில் பணிப்பாளரும், மற்றும் SC பிரிவின் சிரேஷ்ட அலுவலர்களும் பங்கெடுத்ததுடன், தமது பெறுமதிமிக்க பங்களிப்பையும் வழங்கினர்.

கைத்தொழிலுக்கான.சேவைகளுக்கான பயிற்சி

சர்வதேச சந்தையில் போட்டியிடுமுகமாக உயர் தரத்திலான உற்பத்திப்பொருட்களை/சேவைகளை முன்வைப்பதற்கு அவசியமான அறிவுத்தளத்தைப் பகிரும் நோக்கமொன்றுடன் கைத்தொழில், தனியார்/ அரசாங்கத் துறைத் தாபனங்களில் உள்ள ஆளணியினருக்கும் மற்றும் தனிப்பட்டவர்களுக்கும் கட்டளைப்படுத்தல் மற்றும் தர முகாமைத்துவம் மீது பயிற்சியை நிறுவனம் வழங்குகின்றது. உயர் முகாமைத்துவம், நடுத்தர முகாமைத்துவம், நிறைவேற்றுனர்கள், மேற்பார்வை யாளர்கள், தொழில்நுட்ப வியலாளர்கள் மற்றும் கடைத் தள ஊழியர்கள் போன்ற சகல தரங்களையும் கொண்ட ஆளணியினருக்காக ISO 9001 தர முகாமைத்துவ முறைமைகள், ISO 14001 சூழல் முகாமைத்துவ முறைமைகள், ISO 22000 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள், ISO 50001 சக்தி முகாமைத்துவ முறைமைகள், OHSAS 18001 தொழில்நிலை சுகாதார மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள் மற்றும் வேறு தரம் தொடர்பான துறைகள் போன்ற கட்டளைப்படுத்தல் முகாமைத்துவ முறைமைகள் மீது பயிற்சி செயற்றிட்டங்களை இ.க.நி. உள்ளடக்குகின்றது. இந்த செயற்றிட்டங்கள் வேண்டுகோளின் பேரில் வாடிக்கையாளர்களின் இடப் பரப்புக்களில் நடத்தப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டின் போது, எண்பத்தியெட்டு (88) செயற்றிட்டங்கள் இ.க.நி.இல் நடத்தப்பட்டதுடன், இரண்டாயிரத்து அறுபத்தொன்பது (2,069) நபர்கள்



பயிற்றுவிக்கப்பட்டார்கள். ஐம்பத்திமூன்று (53) நிறுவனத்திலான பயிற்சி செயற்றிட்டங்கள் நடத்தப் பட்டதுடன், ஆயிரத்தி ஏழுநூற்றியாறு (1,706) நபர்கள் பயிற்றுவிக்கப் பட்டார்கள். மேற்படி விடயங்கள் மீது எழுபத்தைந்து (75) ஊழியர்களுக்கு பயிற்சி கள் வழங்கப்பட்டன.

2018ஆம் ஆண்டின் போது, மூன்று புதிய பயிற்சி செயற்றிட்டங்கள் அதாவது முகாமைத்துவ முறைமை யில் சான்றுப்பத்திர பயிற்சி நெறி, ஆறு சிக்மா மீதான பயிற்சி செயற்றிட்டம் மற்றும் சூழல் முகாமைத்துவ முறைமையில் சூழல் சட்டத் தேவைப்பாடுகள் மீது சூழல் அம்சத்தினதும் மற்றும் தாக்கத்தினதும் வாழ்க்கைச் சுற்று மனோதோற்றப்பட்டினதும் மற்றும் மதிப்பாய்வினதும் மீதான பயிற்சி செயற்றிட்டம் ஆகியன நடத்தப்பட்டன.

கைத்தொழில்/சேவைத் தாபனங்களின் ஆளணி யினருக்காகவும், இத்துறைகளில் அபிவிருத்தித் தொழிலை நோக்குகின்றவர்களுக்காகவும் ஓவ்வொன்றும் ஒரு வருட காலத்தைக் கொண்ட தர முகாமைத்துவத்தில் மூன்று டிப்ளோமா பயிற்சி நெறிகளும், உணவு தர முகாமைத்துவப் பயிற்சி நெறியில் ஒரு டிப்ளோமாவும் நடத்தப்பட்டன. தர முகாமைத்துவச் செயற்றிட்டங்களில் மூன்று டிப்ளோ மாவில் நூற்றி எண்பத்திமூன்று (183) பங்கெடுப்பாளர்கள் பங்கெடுத்ததுடன், உணவு தர முகாமைத் துவத்தில் டிப்ளோமா செயற்றிட்டத்திற்காக நாற்பத்தி மூன்று (43) பங்கெடுப்பாளர்கள் பங்கெடுத்தனர்.



2018இன் போது, தர முகாமைத்துவம் மீது எட்டு சான்றுப்பத்திரப் பயிற்சிநெறிகள் நடத்தப்பட்டதுடன், இந்தச் செயற்றிட்டங்களில் முன்னூற்றி இருபத்தியொரு (321) பங்கெடுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

மூன்று விசேட செயற்றிட்டங்கள் அதாவது, பொது சுகாதார பரிசோதகர்களுக்கான விழிப்பியல் செயற்றிட்டம், மொறட்டுவை பல்கலைக்கழகம்-முகாமைத்துவ முறைமை கள் மீதான பயிற்சி செயற்றிட்டம் மற்றும் இலங்கை கடற்படை அலுவலர்களுக்காக தர முகாமைத்துவத்தில் (05 நாட்கள்) சான்றுப்பத்திரநெறி ஆகியன நடத்தப்பட்டன. இந்த செயற்றிட்டங்களில் நூற்றி ஐம்பத்தெட்டு (158) பங்கெடுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

2018ஆம் ஆண்டுக்கு, பயிற்சிச் செயற்பாடுகள் ஊடாக ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூபா 37.74 மில்லியன் ஆகும்.

அச்சீடுதல் அலகு

2018ஆம் ஆண்டின் போது, இருபத்தொன்பது (29) கட்டளைகள் அச்சிடப்பட்டதுடன், பயிற்சி செயற்றிட்டங்களுக்கான கையேடுகள், பரீட்சைப் பத்திரங்கள், தர முறைமை ஆவணங்கள், கட்டளைகள் மீதான மேம்படுத்தல் சாதனங்கள், பிரச்சார விடயதானங்கள், தரவுத் தாள்கள் ஆகியவற்றை அடக்கிய 550,000க்கு மேற்பட்ட பதிவுகள் அச்சிடப்பட்டன.

2018இன் போது முன்னேற்றம்

குறிக்கோள்	செயற்பாடு/உப-செயற்பாடு	2018க்கான இலக்கு	2018க்கான உண்மையான
1.1 இ.க.நி.இன் சேவைகளின் சந்தைப்படுத்தலினதும் மற்றும் மேம்படுத்தலினதும் ஊடாக கட்டளைப்படுத்தலினதும் மற்றும் தரத்தினதும் மீது விழிப்பியலை உருவாக்குதல்	1.1.1 ஊடகங்கள் ஊடாக பாவனையாளர் விழிப்பியல் செயற்பாடுகள்	08	72
	1.1.2 வர்த்தகத்துடனும் மற்றும் கல்விசார் பொருட்காட்சிகளுடனும் சம்பந்தம், பொது மக்களுக்கும் மற்றும் தனியார் துறை தாபனங்களுக்கும் விழிப்பியல் செயற்றிட்டங்களையும், கருத்தரங்குகளையும் மற்றும் வியாபார அரங்குகளையும் நடத்துதல்	06	62
	1.1.3 கட்டளைப்படுத்தலினதும் மற்றும் தரத்தினதும் மீது பாடசாலைகளுக்காக விழிப்பியல் திட்டங்களை நடத்துதல்	26	23
	1.1.4 பொருளாதார முன்னேற்றத்திற்கு இ.க.நி.இன் சேவைகளின் நன்மைகள் மீது பல்கலைக்கழகங்களுக்கும், பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கும், தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் விழிப்பியல் செயற்றிட்டங்களை நடத்துதல்		11
1.2 செயல் நிறைவேற்றத் திறமைக்கும், அத்துடன் விருது திட்டத்தை நடத்துவதற்கும் இலங்கையில் தாபனங்கள் மத்தியில் இலங்கை தேசிய தர விருது SLNQA செயற்றிட்டத்தை மேம்படுத்தல்	1.2.1 இலங்கையில் ஏதேனும் தாபனத்திற்கு SLNQAஇன் நன்மைகள் மீது முன்னேற்றத்திலான செயற்றிட்டங்களை நடத்துதல்.	10	99

1. உத்தேசமான புதிய கருத்திட்டங்கள்

1.1 *வயதானோர் பராமரிப்பு இல்லங்களுக்கான சான்றளிப்பு* - வயதானோர் பராமரிப்பு இல்லங்களுக்கான விவரக்கூற்று SLS 1506: 2015 மீதான தேசிய கட்டளையின் பிரகாரம், சான்றளிப்புத் திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக வயதானோர் பராமரிப்பு இல்லங்களின் உதவியை நாடுகின்ற இலங்கையிலுள்ள நரைத்த சந்ததியின் சதவீதத்தில் குறிப்பிட அதிகரிப்பு குறித்து ஆய்வுசெய்யப்பட்டது. வயதானோர் பராமரிப்பு இல்லங்களில் வயதானோருக்கு உயர் மட்டத்திலான வாழ்க்கைத் தரமொன்றின் ஏற்பாட்டினை உறுதி செய்வதும் அத்துடன் மூன்றாவது தரப்பு சான்றளிப்பு ஒன்றின் ஊடாக சிறந்த நடத்தை மீது தன்னம்பிக்கையுடன் சேவையாற்றுவதற்கு வயதானோர் பராமரிப்பு இல்லங்களுக்கு வாய்ப்பை வழங்குவதுமே இந்தச் சான்றளிப்பின் குறிக்கோளாகும்.

1.2 *UTZ சான்றளிப்பு* – சிறந்த பண்ணை முகாமைத்துவம், சிறந்த வர்த்தக வாய்ப்புக்கள், இத்துறையில் சிறந்த எதிர்காலமொன்றக்கு ஊழியர்களுக்கு சிறந்த வாழ்க்கை மற்றும் தொழில் நிலைமைகளை அமுல்படுத்தல் ஆகியவற்றுக்கு மூன்றாவது தரப்பு சான்றளிப்பொன்றை அமுல்படுத்துவதற்கு இலங்கையின் பொருளாதாரத்திற்கு தேயிலையினதும், கோப்பியினதும் மற்றும் கொக்கோவினதும் பங்களிப்பின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்தல் மற்றும் அடையாளங்காணுதல்.

1.3 *மருந்தகங்களின் சிறந்த நடத்தை மீது தேசிய கட்டளை மற்றும் சான்றளிப்புத் திட்டம்* - இலங்கையில் மருந்துகளின் தயாரிப்புக்கு/இறக்குமதிக்கு கிராக்கியை விருத்திசெய்வதையும் அத்துடன் மருந்தகங்களிலிருந்து நம்பகமான சேவை ஏற்பாடொன்றுக்கு பாவனையாளர்களின் எதிர்பார்ப்புக்களையும் கரிசனைக்கெடுத்து, தேசியக் கட்டளையொன்றுக்கான அவசியம் குறித்து ஆய்வுசெய்யப்பட்டது. மருந்துப் பொருட்களின் கொள்வனவு, ஏற்றியிறக்கல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியன மீது சிறந்த நடைமுறைகளை இந்த தேசியக் கட்டளை உறுதிப்படுத்தும். மருந்தகங்களின் சேவைகளின் தரம் மேம்படுத்தலுக்கான வாய்ப்புக்களுக்காக செயற்பாடுகளின் முறைமையைக் கண்காணித்தல், சகல மருந்தகங்களின் முரண்படாத தரத்தை பேணுதல் ஆகியன மீது இது பாவனையாளர் தன்னம்பிக்கையை வழங்கும்.

1.4 *விளையாட்டுப் பொருட்கள் பாதுகாப்புக்கான தேசிய கட்டளைகள்* - இறக்குமதி செய்யப்பட்ட உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களுக்கான பாதுகாப்பிலான உறுதிப்படுத்தல் முறைமையொன்றுக்கான கோரிக்கையை கரிசனைக்கெடுத்து பயன்பாட்டாளர்களுக்கு (குழந்தைகள் மற்றும் சிறுவர்கள்) விளையாட்டுப் பொருட்களின் வகையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தேசிய கட்டளையொன்றை வகுத்தமைப்பதற்கான அவசியம் குறித்து ஆய்வுசெய்யப்பட்டதுடன், மூலசூத்திரமொன்று முன்மொழியப்பட்டது.

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு



ஒன்றிணைந்த தேசியக் கட்டளைப்படுத்தல் செயற்பாட்டின் அத்தியாவசியமான மூலப்பொருளொன்றாக செயற்றிறனானதும், தகுதியானதுமான ஆய்வுகூடச் சேவைகளின் ஏற்பாடு விளங்குகின்றது. இந்த ஆய்வுகூடங்களைத் தாபிப்பதற்கும், பராமரிப்பதற்குமான ஏற்பாடுகளை இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் அதிகாரச் சட்டம் (1984இன் இல.6) விளங்குகின்றது. நாட்டில் மிகவும் பிரசித்தமான சோதித்தல் ஆய்வுகூடமாக விளங்குகின்ற ஆய்வுகூடச் சேவைகள் பிரிவானது தேசிய மட்டத்தில் கட்டளைப்படுத்தலுக்கும், தர உறுதிப்படுத்தலுக்கும் மற்றும் வேறு தொடர்பான செயற்பாடுகளுக்கும் உதவியளிப்பதற்காக பரந்த பலதரப்பட்ட விரிவான இணங்குகின்ற சோதித்தல் சேவைகளை வழங்குகின்றது.

2. சேவைப் பிரிவு





பின்வருமாறு, ஆறு முழுமையாக நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட அலகுகளினால் சோதித்தல் சேவைகள் வசதிபடுத்தப்படுகின்றன:

- இரசாயன ஆய்வுகூடம்
- மின்சார மற்றும், இலத்திரனியல் ஆய்வுகூடம்
- உணவு ஆய்வுகூடம்
- பொருட்கள் ஆய்வுகூடம்
- நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் மற்றும்
- புடவை ஆய்வுகூடம்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பப் பயிற்சியை வழங்குவதன் மூலம் ஆய்வுகூடச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ள அலுவலர்கள் நன்கு பயிற்றுவிக்கப்படுகின்றனர். மென்மேலும் தேசிய மற்றும் சர்வதேச கட்டளை சோதனை முறைகளின் பிரகாரம், உற்பத்திப்பொருட்களை/ பண்டங்களை/பொருட்களைச் சோதிப்பதற்கு/பகுப்பாய்வதற்கு இந்த பணியாட் உறுப்பினர்கள் குறித்துக் கூறத்தக்கதாக பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

3. ஆய்வுகூடத்தின் பாரிய சேவை ஏற்பாடுகள்

தேசத்தின் சேமநலனைப் பேணுவதற்காகவும் சமகாலத்தில் அவர்களின் வாழ்க்கையின் திறமையை மேம்படுத்துவதற்காகவும் நாட்டில் முக்கியமான தேவைப்பாடொன்றாக தரத்திலான உற்பத்தியின் ஆராய்ச்சியை மேற்கொள்வது விளங்குகின்றது. தேசியக் கட்டளைகள் உறுப்பாக பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக கைத்தொழில் பங்களிக்கக் கூடியதாக இருக்கும் வகையில் போட்டிக்குரியதாக கைத்தொழில்கள் இருப்பதற்கு ஆதரவளிக்கும் அதேவேளை தேசியக் கட்டளை விபரக்கூற்றுக்களுடன் இணங்கும் விதத்தில் உற்பத்திப்பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதானமாக பாவனையாளர் களின் பாதுகாப்பிற்காக இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்தினாலும், அத்துடன் வேறு அரசாங்க ஒழுங்குவிதிகளினாலும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலைக் கரிசனைக்கெடுத்து, மூன்று கட்டாயமான திட்டங்களை இ.க.நி. ஆரம்பித்துள்ளது. கட்டளைச் சோதனை முறையின்(முறைகளின்) பிரகாரம் உற்பத்திப்பொருட்களின்/பொருட்களின் பகுப்பாய்வும் கட்டளை விவரக்கூற்றுடன் (விபரக்கூற்றுக்களுடன்) உற்பத்திப்பொருட்களின்/பொருட்களின் உறுதித் தன்மையின் சரிபார்த்தலும் அந்த சகல திட்டங்களின் முக்கியமான செயற்பாடாகும்.



தேசிய கட்டளைகள் உறுப்புடன் இணைந்துள்ள ஆய்வுகூடமாக ஆய்வு சேவைகள் பிரிவானது நம்பகமானதும், செம்மையானதுமான சோதனை முடிவுகளை வழங்குவதன் ஊடாக மேற்படி திட்டங்களின் நேர்மையை உறுதிப்படுத்து வதற்கான முக்கியமான தேசிய பொறுப்பொன்றைக் கொண்டுள்ளது. மேற்படி திட்டங்களை பயனுறுதிவாய்ந்ததாக நிருவகிப் பதற்கு ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு உதவுவது மட்டுமன்றி ஆனால் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு பல் எண்ணிக்கையிலான வழகளில் அரசாங்க நிறுவனங்களுக்கும் அத்துடன் தனியார் துறை தாபனங்களுக்கும் உதவியளிக்கின்றது.

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவினாலும் மற்றும் அதன் பயனாளர்களாலும் வழங்கப்படும் பாரிய சேவைகள் பின்வருமாறு தொகுக்கப்பட முடியும்:

➢ உற்பத்திப்பொருட்களினதும், பண்டங்களினதும் மற்றும் பொருட்களினதும் சோதித்தல்:

- **இ.க.நி.இனால் நிருவகிக்கப்படும் கட்டாயமான திட்டங்களுக்கு உதவுதல்**

அ) உற்பத்திப்பொருள் சான்றளிப்பு குறிகள் திட்டம் (SLS குறி) – பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் வினைப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் தேசிய கட்டளைகளின் பிரகாரம் உற்பத்திப்பொருட்களின் தரத்தை சான்றுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.
ஆ) இறக்குமதி சோதனைத் திட்டம் - இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரினால் வினைப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் தேசிய கட்டளைகளின் படி தரத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதன் ஊடாக இறக்குமதிகளின் கட்டுப்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்டது.
இ) சக்தி செயற்றிறன் சுட்டித்துண்டிடுதல் திட்டம் - இலங்கை நிலைத்திருக்கத்தக்க சக்தி அதிகார சபையினால் வினைப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் மின்சார உற்பத்திப்பொருட்களின் சக்தி செயற்றிறன் செயல் நிறைவேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

உற்பத்திப்பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதன் மூலமும், சுகாதார மற்றும் பாதுகாப்பு தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துவதன் மூலமும் பாவனையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இந்த தர உறுதிப்படுத்தல் திட்டங்களின் நோக்கமாகும்.

- **ஏனைய தர உறுதிப்படுத்தல் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தல்:**

அ) இலங்கைக் கட்டளைகளின் வகுத்தமைத்தலுக்கு அவசியப்படும் சம்பந்தப்பட்ட சோதனைத் தரவுகளை வழங்குதல்.
ஆ) வெளியார் தாபனங்களிலிருந்து/கைத்தொழில்களிலிருந்து மாதிரிகளின் பகுப்பாய்வு – அவற்றின் தர மேம்படுத்தலையும், உற்பத்திப்பொருள் முன்னேற்றத்தையும் மற்றும் உற்பத்திப் பொருட்களின் தர உறுதிப்படுத்தல் செயற்பாடுகளையும் ஆதரவளித்தல்.
இ) ஏற்றுமதி உற்பத்திப்பொருள் சோதித்தல்.
ஈ) அரசாங்கத் தாபனங்களினால் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வுகளுக்கு மாதிரிகளின் பகுப்பாய்வு
உ) அரசாங்க/தனியார் துறைத் தாபனங்களின் கொள்வனவு நோக்கங்களுக்காக மாதிரிகளின் பகுப்பாய்தல்.
ஊ) நீதித்துறைக் கட்டளைகளுக்காக கௌரவ சேவைகள் (நீதிமன்றங்களின் கட்டளையினால் மாதிரிகளைச் சோதித்தல்)

➢ அதன் சேவைகளின் செயலடைக்கோவையின் மத்தியில், தேசிய சோதனை தகுதியின் முன்னேற்றமானது ஆய்வுகூடத்தின் இன்னொரு முக்கிய பொறுப்பாகும். இது பின்வருமாறு இவ் வழியாக உதவியளிக்கின்றது.

- சேவைத்துறைக்கு/தயாரிப்பு கைத்தொழில்களுக்குஆய்வுகூட சோதித்தல், பொதுவான ஆய்வுகூட நடைமுறைகள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் ஆகியன மீது தொழில்நுட்ப பயிற்சியை வழங்குதல்.
- பட்ட பயிற்சிநெறியில் பயிற்சிநெறி மொடியூல் ஒன்றை முழுமைப்படுத்துவதற்காக பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியை வழங்குதல்.
- தர தணிக்கைகள் ஊடாக தர உறுதிப்படுத்தல் நடைமுறைகளை முன்னேற்றுவதற்காக கைத்தொழில்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- அரசாங்க/தனியார் துறைத் தாபனங்களில் சோதித்தல்/அளவிடுதல் உபகரணங்களினதும் மற்றும் வேறு விடயங்களினதும் கொள்வனவில் தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்.
- அரசாங்க/தனியார் துறை தாபனங்களுக்கு நிறுவனரீதியிலான மட்ட உற்பத்திப்பொருள் விவரக்கூற்றுக்களைத் தயாரித்தல்.

4. ஆய்வுகூடத் தத்துவமளிப்பு நிலை

இணக்க மதிப்பீட்டுக்கு இலங்கை தத்துவமளிப்புச் சபையினால் மூன்று ஆய்வுகூட அலகுகள் கீழே வழங்கப்பட்டுள்ளவாறு தத்துவமளிக்கப்பட்டதுடன், தத்துவமளிப்பின் விரிவெல்லைகள் ஒவ்வொரு ஆய்வுகூட அலகின் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- இரசாயன ஆய்வுகூடம்
- உணவு ஆய்வுகூடம்
- நுண்ணுயிரியல் ஆய்வுகூடம்

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு

4.1 இரசாயன ஆய்வுகூடம்

தத்துவமளிப்பு நிலை		பிரயோகிக்கத்தக்க சோதனை முறைகள்/கட்டளைகள்
உற்பத்தி (சோதனைகளின் எண்.)	குறிப்பான சாராமாரி	
நீர் மற்றும் கழிவு நீர் (18)	சல்பேற்	APHA 22nd Ed., 4500 $SO_4$2- E
	நிறுத்திவைத்தற் திண்மங்கள்	APHA 22nd Ed., 2540 - D
	மொத்த கரைந்த திண்மங்கள்	APHA 22nd Ed., 2540- C
	கலங்கல்	APHA 22nd Ed., 2130 B
	மக்னீசியம்	APHA 22nd Ed., 3500- Mg B
	நைத்திரேற்றுக்கள்	APHA 22ndEd., 4500- NO_3- B
	pH	APHA 22ndEd , 4500- H+ B
	பொசுபரசு	APHA 22nd Ed., 4500- P C
	குளோரைட்	APHA 22nd Ed, 4500 Cl- B
	மின்சாரக் கடத்தி	APHA 22nd Ed., 2510 - B
	வன்தன்மை	APHA 22nd Ed., 2340 - C
	காரத்தன்மை, மொத்தம்	APHA 22nd Ed., 2320 B
	அமோனியா, அல்புமினொயிட்	SLS 614: 2013
	கல்சியம்	APHA 22nd Ed., 3500 - Ca B
	சுவை	CH-TM-5.4-001 கூருணர்வு மதிப்பாய்வு *
உரம் மற்றும் உரக் கலவைகள் (11)	அமோனியம்சார் N	LS 645: பாகம் 1:2009 B மீதான பிரிவு
	மொத்த நைதரசன்	SLS 645: பாகம்1:2009 C மீதான பிரிவு
	ஈரப்பதன்	SLS 645: பாகம் 2:1984
	புளரட்	SLS 645: பாகம் 3:2009 முறை 2
	மொத்த பொட்டாசியம்	CH-TM_5.4_003 (SLS 645: பாகம் 4:பிரிவு 01: 1989 மீதான அடிப்படை)
	நீரில் கரையத்தக்க பொட்டாசியம்	CH-TM_5.4_002 (AOAC 983.02 மீதான அடிப்படை)
	மொத்த பொசுபரசு	SLS 645: பாகம் 5:1985 வாசகம் 7
	நீரில் கரையத்தக்க பொசுபரசு	SLS 645: பாகம்5:1985 வாசகம் 8
	சிற்றிக் அமிலம் கரையத்தக்க பொசுபரசு	SLS 645: பாகம் 5:1985 வாசகம் 10
	கல்சியம்	SLS 645: பாகம் 6:1990 பிரிவு 01
	மக்னீசியம்	SLS 645: பாகம் 6:1990 பிரிவு 01
மட்பாண்டம் (02)	ஈயம்	SLS 1222: பாகம்2:2001 ISO 6486-1 : 1999
	கட்மியம்	SLS 1222: பாகம் 2:2001 ISO 6486-1 : 1999

*குடிக்கக்கூடிய நீர், போத்திலிலிடைக்கப்பட்ட குடி நீர் மற்றும் இயற்கையான கனிப்பொருள் நீர் ஆகியனவற்றுக்கு மட்டுமே கூருணர்வு மதிப்பாய்வின் ஊடாக சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு

4.2 உணவு ஆய்வுகூடம்

தத்துவமளிப்பு நிலை		பிரயோகிக்கத்தக்க சோதனை முறைகள்/கட்டளைகள
உற்பத்தி (சோதனைகளின் எண்.)	உற்பத்தி (சோதனைகளின் எண்.)	
தேயிலை (08)	உலர் பதார்த்தம்	SLS 28: பாகம் 1: 2008 (ISO 1572:1980 (E)
	திரளில் இழப்பு	SLS 28: பாகம் 2: 2008 (ISO 1573:1980 (E)
	மொத்த சாம்பல்	SLS 28: பாகம் 3: 2008 (ISO 1575:1987 (E)
	மொத்த சாம்பலின் நீரில் கரையத்தக்க சாம்பல்	SLS 28: பாகம் 4: 2008 (ISO 1576:1988 (E)
	அமிலத்தில் கரையாத சாம்பல்	SLS 28: பாகம் 5: 2008 (ISO 1577:1987 (E)
	நீரில் கரையத்தக்க சாம்பலின் காரத்தனமை	SLS 28: பாகம் 6: 2008 (ISO 1578:1975 (E)
	நீர் பிரித்தெடுப்பு	SLS 28: பாகம் 7: 2008 (ISO 9768:1994 (E)
	சுத்திகரிக்கப்படாத நார்	SLS 28: பாகம் 8: 2008 (ISO 15598:1999 (E)
பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள்	பால் கொழுப்பு	SLS 735 பாகம் 1 : பிரிவு 2 : 2009 (ISO 1736:2008)
	நியமிக்கத்தக்க அமிலத்தன்மை	SLS 735 பாகம் 2:1987
	ஈரப்பதன்	SLS 735 பாகம் 3 :1987 வாசகம் 4
உண்ணத்தக்க எண்ணெய்கள் மற்றும் கொழுப்புகள் (08)	முறிவுக்குரிய காட்டி	SLS 313 பாகம் 1: பிரிவு 5 : 2009 (ISO 6320 : 2000)
	சவர்க்காரமயமாக்கல் பெறுமதி	SLS 313 பாகம் 2 : பிரிவு 1: 2014 (ISO 3657 : 2013)
	அயோடின் பெறுமதி	SLS 313 பாகம் 2: பிரிவு 2: 2014 (ISO 3961 : 2013)
	சுயேட்சையான கொழுப்பு அமிலங்கள்	SLS 313 பாகம் 2: பிரிவு 6: 2009 (ISO 660 : 2009)
	கரையாத மாசுக்கள்	SLS 313 பாகம் 3: பிரிவு 4: 2009 (ISO 663 : 2007)
	ஈரப்பதன் மற்றும் பொருள் எரிபற்றற்தன்மை	SLS 313 பாகம் 3: பிரிவு 5: 2009 (ISO 662 : 1998)
	பெரொக்ஸைட் பெறுமதி	SLS 313 பாகம் 3: பிரிவு 7: 2009 (ISO 3960 : 2007)
	சவர்க்காரமயமாகாத பொருள்	SLS 313 பாகம் 4 : பிரிவு 3: 2010 (ISO 3596 : 2000 (E)
சீனி மற்றும் சீனி உற்பத்திப் பொருட்கள் (02)	முனைவாக்கம்	SLS 191: 1989 பிற்சேர்க்கை A
	உலர்த்தல் மீதான இழப்பு	SLS 191: 1989 பிற்சேர்க்கை C

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு

4.3 நுண்ணுயிரியல் ஆய்வுகூடம்

தத்துவமளிப்பு நிலை		பிரயோகிக்கத்தக்க சோதனை முறைகள்/கட்டளைகள
உற்பத்தி (சோதனைகளின் எண்.)	உற்பத்தி (சோதனைகளின் எண்.)	
காபனேற்றப்பட்ட குடிபானங்கள் (SLS 183: 2013) R.T.S. பழப் பானங்கள் (SLS 729: 2010) சிந்தெட்டிக் செயற்கை கோர்டியல்கள் (SLS 221:2010) பழப் பானம் மற்றும் நெக்டார்கள் (SLS1328:2008)	காற்றில்வாழுகின்ற தகட்டு எண்ணிக்கை/மி.லீ.	SLS 516: பாகம் 1: பிரிவு1 : 2013 (ISO4833)
	மதுவம் மற்றும் பூஞ்சண எண்ணிக்கை/மி.லீ.	SLS 516: பாகம் 2: பிரிவு 1 : 2013 (ISO 21527)
தேயிலை கறுப்பு மற்றும் பச்சைகோழி இறைச்சி (SLS 1161:2003) கொழுப்பு பரவுகைகள் மற்றும் கலப்பிடப்பட்டகொழுப்பு பரவுகைகள் (SLS 1427:2011) சாப்பிடுவதற்குத் தயாரான வெளிதள்ளப்பட்ட சிற்றுண்டிகள் (SLS 1162:1997) பால் மா (SLS 731 :2008) ஐஸ் கிரீம் (SLS 223:1989) உலர்த்தப்பட்ட தேங்காய்ப்பூ (SLS 98:2013) கறுவாடு (SLS 643:2007) உறைபனியிலான கலப்புக்கள் மற்றும் உறைந்துள்ள குடிபானங்கள் (SLS 967:1992) இழையத்திலான சோயா புரதம் (SLS 898:1990) பதப்படுத்தப்பட்ட தானிய அடிப்படையிலான உணவுகள் குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் (SLS 1036:2011) இனிப்பூட்டப்பட்ட கட்டிப் பால் (SLS 179:2012) அரைக்கப்பட்ட கறுத்த மிளகு மற்றும் வெள்ளை மிளகு (SLS 1372:2009) பிஸ்கட் (SLS 251:2010) தேங்காய் பால் மா (SLS 1309:2007)	காற்றில்வாழுகின்ற தகட்டு எண்ணிக்கை/கி.	SLS 516: பாகம் 1: பிரிவு 1: 2013 (ISO4833-1: 2013)
தேயிலை கறுப்பு மற்றும் பச்சை (SLS 98:2013) உலர்த்தப்பட்ட தேங்காய்ப்பூ (SLS 643:2007) கறுவாடு (SLS773:1987) சீஸ் (SLS 179:2012) வேர்பர்ஸ் (SLS 1313:2007) பிஸ்கட் (SLS 251:2010) அரைக்கப்பட்ட கறுத்த மிளகு மற்றும் வெள்ளை மிளகு (SLS 1372:2009)	மதுவம் மற்றும் பூஞ்சண எண்ணிக்கை/கி.	SLS 516 : பாகம் 2 : பிரிவு 2 : 2013(ISO 21527 -2: 2008)
கொழுப்பு பரவுகைகள் மற்றும் கலக்கப்பட்டகொழுப்பு பரவுகைகள் (SLS 1427:2011) பட்டர் (SLS 2 79:1988) சொக்லேட் (SLS 326:2015)	மதுவம் மற்றும் பூஞ்சண எண்ணிக்கை/கி.	SL S 516 : பாகம் 2: பிரிவு 2 : 2013(ISO 21527 -2: 2008)

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு

யோகர்ட் (SLS 824: பாகம் 2: 1989)	மதுவம் மற்றும் பூஞ்சண எண்ணிக்கை/கி.	SLS 516 : பாகம் 2: பிரிவு 1 : 2013(ISO 21527 -2: 2008)
குரக்கன் மா (SLS 928: 1991) அரிசி மா (SLS 913:1991)	பூஞ்சண எண்ணிக்கை/கி.	SLS 516 : பாகம் 2: பிரிவு 2 : 2013(ISO 21527 -2: 2008)
காபனேற்றப்பட்ட குடிபானங்கள் (SLS 183 : 2013) R.T.S. பழப் பானங்கள் (SLS 729 : 2010) சிந்தெட்டிக் செயற்கை கோர்டியல்கள் (SLS 221: 2010) பழப் பானம் மற்றும் நெக்டார்கள் (SLS 1328: 2008) பியர் (SLS 234: 1985)	Coliforms MPN/மி.லீ.	SLS 516 : பாகம் 3: பிரிவு 1: 2013(ISO 4831:2006)
தேயிலை கறுப்பு மற்றும் பச்சை சாப்பிடுவதற்குத் தயாரான வெளித்தள்ளப்பட்ட சிற்றுண்டிகள் (SLS 1162:1997) கறுவாடு (SLS 643:2007) யோகர்ட் (SLS 824: பாகம் 2: 1989 நுண்ணியதாக்கப்பட்ட இறைச்சி (SLS 1218:2001) சீஸ் (SLS 179:2012) வேர்பர்ஸ் (SLS 1313:2007) பிஸ்கட் (SLS 251:2010) அரைக்கப்பட்ட கறுத்த மிளகு மற்றும் வெள்ளை மிளகு (SLS 1372:2009) பால் மா (SLS 731:2008) தயிர் (SLS 824: பாகம் 1 :1989) தேங்காய் பால் மா (SLS 1309:2007) பேக்கன் (SLS 342:2001) ஹாம் (SLS 1146:2001)	E. coli MPN/கி.	SLS 516 : பாகம் 12: 2013(ISO 725 1 : 2005)
தேயிலை கறுப்பு மற்றும் பச்சை கொழுப்பு பரவுகைகள் மற்றும் கலக்கப்பட்டகொழுப்பு பரவுகைகள் (SLS 1427: 2011) பட்டர் (SLS 279:1988) சாப்பிடுவதற்குத் தயாரான வெளிதள்ளப்பட்டசிற்றுண்டிகள் (SLS 1162:1997) பால் மா (SLS 731: 2008) ஐஸ் கிரீம் (SLS 223:1989) உலர்த்தப்பட்ட தேங்காய்ப்பூ (SLS 98:2013) கறுவாடு (SLS 643: 2007) உறைபனியிலான இனிப்புகள் மற்றும் உறைந்துள்ள குடிபானங்கள் (SLS 967:1992) இழையத்திலான சோயா புரதம் (SLS 898:1990) பதப்படுத்தப்பட்ட தானிய அடிப்படையிலான உணவுகள் குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் (SLS 1036:2011) இனிப்பூட்டப்பட்ட கட்டிப் பால் (SLS 179:2012) பிஸ்கட் (SLS 251:2010) தேங்காய் பால் மா (SLS 1309:2007) வேர்பர்ஸ் (SLS 1313:2007)	Coliforms MPN/கி.	SLS 516: பாகம் 3: பிரிவு 1 : 2013(ISO 4831:2006)

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு

கொழுப்பு பரவுகைகள் மற்றும் கலக்கப்பட்ட கொழுப்பு பரவுகைகள் (SLS 1427:2011) பட்டர் (SLS 279:1988)	லெப்லோரிக் அங்கிகள்/கி.	SLS 516: பாகம் 11: 1999
கோழி இறைச்சி (SLS 1161:2003) நுண்ணியதாக்கப்பட்டஇறைச்சி (SLS1218:2001) பால் மா (SLS 731 :2008) இனிப்பூட்டப்பட்ட கட்டிப் பால் (SLS 179:2012) பிஸ்கட் (SLS 251:2010) வேர்பர்ஸ் (SLS 1313:2007) கறுவாடு (SLS 643:2007) சீஸ் (SLS 179:2012) ஹாம் (S LS 1146:2001)	*Staphylococcus aureus* /கி.	SLS 516: பாகம் 6: பிரிவு 1: 2013 (ISO 68881: 1999)
தேயிலை கறுப்பு மற்றும் பச்சைகோழி இறைச்சி (SLS 1161:2003) சாப்பிடுவதற்குத் தயாரான வெளிதள்ளப்பட்ட சிற்றுண்டிகள் (SLS 1162:1997) பால் மா (SLS 731 :2008) ஐஸ் கிரீம் (SLS 223:1989) உலர்த்தப்பட்ட தேங்காய்ப்பூ (SLS 98:2013) கறுவாடு (SLS 643:2007) உறைபனியிலான கலப்புக்கள் மற்றும் உறைந்துள்ள குடிபானங்கள் (SLS 967:1992) இழையத்திலான சோயா புரதம் (SLS 898:1990) பதப்படுத்தப்பட்ட தானிய அடிப்படையிலான உணவுகள் குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் (SLS 1036:2011) இனிப்பூட்டப்பட்ட கட்டிப் பால் (SLS 179:2012) அரைக்கப்பட்ட கறுத்த மிளகு மற்றும் வெள்ளை மிளகு (SLS 1372:2009) பிஸ்கட் (SLS 251:2010) தேங்காய் பால் மா (SLS 1309:2007) பேக்கன் (SLS 342:2001) ஹாம் (SLS 1146:2001) சொக்லேட் (SLS 326:2015) வேர்பர்ஸ் (SLS 1313:2007)	சல்மொனல்லா/கி.	SLS 516: பாகம் 5: பிரிவு 1: 2013 (ISO 6579: 2002)
தக்காளி சோஸ்/கெச்அப் (SLS 260:2008)	ஹொவார்ட் பூஞ்சண எண்ணிக்கை	SLS 260: 2008
மிளகாய் சோஸ் (SLS 581:20 08)	ஹொவார்ட் பூஞ்சண எண்ணிக்கை	SLS 581:20 08
ஜாம்கள், ஜெலிகள் மற்றும் மார்மலேட்கள் (SLS 265 : 2011)	ஹொவார்ட் பூஞ்சண எண்ணிக்கை	SLS 265: 2011

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு

மாங்காய் சட்னி (SLS 446:2001)	ஹொவார்ட் பூஞ்சண எண்ணிக்கை	SLS 446: 2001
தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் (SLS 591:2014)	வர்த்தக மலட்டுத்தன்மை	SLS 516: பாகம் 10: 1983
நீர்/ஐஸ் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் (SLS 894: 2003) போத்தலில் இயற்கையான கனிப்பொருள் நீர் (SLS 1038: 2003) குடி நீர் (SLS 614: 2013) பதப்படுத்தலுக்கு ஐஸ் (SLS 971:1992) நீர்/ஐஸ் (EU தேவைப்பாடு)	22 °C & 37°Cஇல் காற்றில்வாழுகின்ற தகட்டு எண்ணிக்கை/மி.லீ.	SLS 516: பாகம் 1: பிரிவு 1: 2013(ISO 4833-1: 2013)
	Coliforms MF / 250 ml	SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013
	E. coli MF / 250 ml	SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013
	Coliforms MF / 100 ml	SLS 1461: பாகம் 1 பிரிவு 1: 2013(ISO 9308-1: 2000)
	Faecal Ciliforms MF/100 ml	SLS 1461: பாகம் 1 பிரிவு 1: 2013(ISO 9308-1: 2000)
	E. coli MF /250 ml	SLS 1461: பாகம் 1 பிரிவு 1: 2013(ISO 9308-1: 2000)
	Intestinal Enter ococci (Faecal Streptococci) MF/100 ml	ISO 7899-2: 2000
	Coliforms MPN /100 ml	SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013
	E. coli MPN/100 ml	SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013
	Faecal Ciliforms MPN / 100 ml	SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013

2018ஆம் ஆண்டுக்கு தோற்றுவிக்கப்பட்ட வருமானம்

செயற்பாடு	மொத்த வருமானம் (ரூபா மில்.)
சோதித்தல் சேவைகள்	172
தொழில்நுட்பப் பயிற்சி (வெளியார் தாபனங்களின் தொழில்நுட்ப பணியாளரின் பயிற்சி)	0.05



அளவையியல் பிரிவு

இலங்கையின் தேசிய அளவீட்டு முறைமையின் முக்கியமான அங்கமொன்றாக இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் அளவையியல் பிரிவு விளங்குகின்றது. கைத்தொழில் மற்றும் வர்த்தகம், அளவீட்டு முறைமைகளைத் தொழிற்படுத்தும் கைத்தொழில், வர்த்தகம், சோதித்தல் மற்றும் மதிப்பாராய்தல் ஆய்வுகூடங்கள் ஆகியனவற்றின் மத்தியில் செல்லுபடியான அளவீட்டு நடைமுறைகளைப் பரப்புவதே அதன் ஆரம்பநிலையான நோக்கமாகும். தர உறுதிப்படுத்தல் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு பயிற்சி வசதிகளையும் பிரிவு வழங்குகின்றது. இது பொறிமுறை மற்றும் அனல் மதிப்பாராய்தல்களுக்கு சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ISO/IEC 17025 தத்துவமளிப்பினைக் கொண்டுள்ளது.

2018ஆம் ஆண்டில், பிரிவினால் வழங்கப்பட்ட செயற்பாடுகளினதும், சேவைகளின் பெறுமதியினதும் சாராம்சம் ஒன்று கீழே வழங்கப்பட்டுள்ளது:

இல.	விபரங்கள்	தொகை	பெறுமதி (ரூ. மில்.)
1.	மதிப்பாராய்தல் மற்றும் அளவிடுதல்		
1.1	உள்ளக (ஆய்வுகூடச் சேவைகள் பிரிவுக்கு)	181	782 150.00
1.2	வெளிவாரி (கைத்தொழில் மற்றும் சேவைத் துறை)	3,909	28 617 298.00
2	மதிப்பாராய்தல் மீதான செயலமர்வு	02	415 000.00
	மொத்தம்		**29** 814 **448.00**



ஆவணப்படுத்தல், தகவல் பிரிவு

ISOஇன் உறுப்புக்களாக தேசிய மட்டத்தில் சமூகத்திற்கான கட்டளைகள், தொழில்நுட்ப ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான செயற்பாடுகள் ஆகியன மீதான தகவலைப் பரப்புவதற்கு தேசிய கட்டளைகள் உறுப்புக்கள் பொறுப்பானவையாகும். இந்நோக்கத்திற்கு சேவையளிப்பதற்காக ஆவணப்படுத்தல் தகவல் பிரிவு குறித்துரைக்கப்பட்டுள்ளது.

கட்டளைப்படுத்தலினதும் மற்றும் தர முகாமைத்துவத்தினதும் மீதான இலக்கியத்திற்கு ஒரு நிறுத்துகையிலான தகவல் நிலையமொன்றாக இ.க.நி.இன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவு விளங்குகின்றது. நிபுணத்துவத்தைக் கொண்ட தகவல் நிலையமொன்றாக தேசிய, சர்வதேச மற்றும் வெளிநாட்டு தேசிய கட்டளைகளின் விரிவானதும், புதுப்பிக்கப்பட்டதுமான சேகரிப்பினையும் மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கு பயனுள்ள தொழில்நுட்ப ஒழுங்குவிதிகளையும் கொண்ட கட்டளைகள் மற்றும் தர முகாமைத்துவம் மீதான வளங்களின் ஒரு புதுமையான சேகரிப்பொன்றை வாடிக்கையாளர்களுக்கு அது வழங்குகின்றது.

WTO உடன்படிக்கையினதும் மற்றும் WTO விசாரணைப் புள்ளியினதும் கீழ் இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் மாதாந்த ஈ-மெயில் ஊடாக இலங்கையின் பங்காளர்களுக்கு WTO அறிவித்தல்களை இ.க.நி. பங்கிட்டதுடன், இ.க.நி. இணையதளத்திலும் பதிவேற்றியது. தேசிய, வெளிநாட்டு மற்றும் சர்வதேச கட்டளைகள் மீதான சகல தொழில்நுட்ப விசாரணைகளுக்கும் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவு பதிலிறுத்துள்ளது.



நூலகமானது பொதுமக்களுக்கு இலவசமாக திறந்திருப்பதுடன், ஆண்டின் போது கிட்டுகின்ற வளங்களை கொள்வனவு செய்வதற்கும் பார்வையிடுவதற்கும் நூலகத்திற்கு 1,650 வாடிக்கையாளர்கள் வருகை தந்தனர்.

செய்திப்பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்ற இ.க.நி. தொடர்பான ஏதேனும் தகவல் 'ஸ்கான்' செய்யப்பட்டு ஈ-மெயில் ஊடாக உள்ளகப்பணியாளருக்கு பரப்பப்படுகின்றது. 2018ஆம் ஆண்டில், அனுப்பப்பட்ட செய்தி நறுக்குகளின் எண்ணிக்கை 115 ஆகும். வேறு கட்டளைகள் தாபனங்களின் செய்தியை உள்ளடக்கும் "WSSN News" என்ற செய்தித்திரட்டு தயாரிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கும் மற்றும் உள்ளகப் பணியாளருக்கும் அனுப்பப்பட்டது. ஏனைய செய்தித் திரட்டுக்களாக 24 Library Alerts,12 Library News மற்றும் 12 Standards Alerts ஆகியன தயாரிக்கப்பட்டு, ஈ-மெயில் ஊடாக உள்ளகப் பணியாளருக்கும் மற்றும் வெளியிலான வாடிக்கையாளர்களுக்கும் அனுப்பப்பட்டன.

பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளவாறு, கட்டளைகளினதும் மற்றும் வேறு சேவைகளினதும் விற்பனையிலிருந்து ரூபா 14.0 மில்லியன் கொண்ட வருமானமொன்றை ஆவணப்படுத்தல், தகவல் பிரிவு பதிவுசெய்தது.

	தோற்றுவிக்கப்பட்ட வருமானம் (ரூ) மில்லியன்
உறுப்புரிமை	0.016
கட்டளைகளின் விற்பனை	
இலங்கைக் கட்டளைகள்	6.628
பிரிட்டிஷ் கட்டளைகள்	2.208
ISO கட்டளைகள்	3.014
ASTM கட்டளைகள்	0.669
IEC கட்டளைகள்	1.213
வேறு வெளிநாட்டுக் கட்டளைகள்	0.202
தகவல் சேவைகள்	0.028
சுவரொட்டிகளின் விற்பனை	0.030
Q கொடிகளின் விற்பனை	0.013

உற்பத்தி சான்றளிப்புப் பிரிவு

1. உற்பத்தி சான்றளிப்பு பிரிவு பின்வரும் நான்கு திட்டங்களை செயற்படுத்துவதுடன், இதில் இரு திட்டங்கள் 2018ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

1.1 SLS குறி திட்டங்கள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தயாரிப்பாளர்கள்)

1.2 சுகாதார அமைச்சின் சார்பாக போத்தல் குடிநீர் பதிவுத் திட்டம்

1.3 UTZ தேயிலைச் சான்றளிப்புத் திட்டம்

1.4 மத்திய சூழல் அதிகாரசபையுடனான கூட்டுமுயற்சியில் உயிரகரீதியில் தரம்குன்றக்கூடிய தகன எரிப்பிலான 'பிளாஸ்ரிக்' உற்பத்திப்பொருட்களின் உற்பத்திக்கு/தயாரிப்புக்கு அங்கீகாரத்தை வழங்குவதற்கான திட்டம்

2018ஆம் ஆண்டின் போது, 1.3 மற்றும் 1.4 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2. மேற்படி திட்டங்களின் செயல்நிறைவேற்றம்

2.1 SLS குறி திட்டங்கள்

2.1.1 2018ஆம் ஆண்டின் போது, உள்நாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து, 172 விண்ணப்பங்களும், வெளிநாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து 56 விண்ணப்பங்களும் கிடைத்தன.

2.1.2 உற்பத்தி இணக்கத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, திட்டத்தின் கீழ் 2,541 மாதிரிகள் பெறப்பட்டன. இது அனுமதிச்சீட்டுக்களை வழங்கும் நோக்கத்திற்காக உற்பத்தி தர மதிப்பாய்வுக்காகப் பெறப்பட்ட மாதிரிகளையும், திட்டத்தின் கீழ் அனுமதிச்சீட்டுக்களைக் கொண்டுள்ள தயாரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளையும் உள்ளடக்குகின்றது.

2.1.3 2018ஆம் ஆண்டின் போது, 1,200 SLS-பிற்பட்ட சான்றளிப்புக் கருத்திட்டங்கள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தயாரிப்பாளர்கள்) மற்றும் 975 SLS-முற்பட்ட கருத்திட்டங்கள் கையாளப்பட்டன.

2.1.4 2018ஆம் ஆண்டின் போது, உள்நாட்டுத் தயாரிப்பாளர்களுக்காக 537 (முழு நாள் தொழிற்சாலை) தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு தயாரிப்பாளர்களுக்காக 27 (மூன்று முழு நாள் தொழிற்சாலை) தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நடைமுறைக் கட்டுப்பாட்டினையும், உற்பத்தியின் தர முகாமைத்துவ முறைமையையும் மதிப்பிடுமுகமாகவும் உற்பத்திப்பொருளினதும் மற்றும் சோதனை வசதிகளினதும் இணங்கத்தக்க தரத்துடனும், தர உறுதிப்படுத்தலுடனும் உற்பத்திப்பொருளைத் தயாரிப்பதற்கான தகுதியை மதிப்பாய்வதற்கும் அத்துடன் 4Mகளை (மனிதன், பொறி, முறைகள் மற்றும் பொருட்கள்) மதிப்பாயுமுகமாகவும் இந்தத் தணிக்கைகள் செய்யப்பட்டன.

2.1.5 2018ஆம் ஆண்டின் போது, 169 புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், 170 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன. மொத்தமாக 1,500 அனுமதிப்பத்திரங்கள சான்றளிக்கப்பட்டன.

2.1.6 SLS குறி திட்டத்தினுள் பின்வரும் புதிய உற்பத்திப்பொருட்கள் பதிவுசெய்யப்பட்டன:



- *சாப்பிடுவதற்கு தயாரான வெளிநீட்டலிலான சிற்றுண்டிகள்*
- *போர்ட்லண்ட் ஸ்லக் சிமெந்து*
- *நாக பொஸ்பேற் பிறைமர்*
- *கொக்கோ அடிப்படையிலான இனிப்புப் பண்டங்கள்*
- *குரக்கன் மா*
- *தேங்காய் கிறீம்*
- *கறுத்த மிளகு தூள்*
- *வீதி குறித்தல் தீந்தை*

2.1.7 SLS குறிகள் திட்டத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 164.0 மில்லியன் கொண்ட இலக்குக்கு எதிராக ரூபா 176.8 மில்லியன் ஆகும்.

2.2. போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் பதிவு

2.2.1 2018ஆம் ஆண்டின் போது, இத்திட்டத்தின் கீழ் 19 விண்ணப்பங்கள் படிநிலைப்படுத்தப்பட்டன. ஆண்டின் போது அவசியமான மாதிரிப்படுத்தலும் மற்றும் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், 32 விண்ணப்பங்கள் மீதான பரிந்துரைகள் செய்யப்பட்டன.

2.2.2 இத்திட்டத்தின் ஊடாகத் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 100,000 மில்லியன் என்ற இலக்குக்கு எதிராக ரூபா 190,000 மில்லியன் ஆகும்.

2.3 UTZ தேயிலை சான்றளிப்புத் திட்டம்

2.3.1 2018ஆம் ஆண்டில், இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2018ஆம் ஆண்டின் போது 03 சான்றுப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. 2018ஆம் ஆண்டின் போது, திட்டத்திற்கான தத்துவமளிப்பு பெறப்பட்டது.

2.4 மத்திய சூழல் அதிகாரசபையுடனான கூட்டுமுயற்சியில் உயிரகரீதியில் தரம்குன்றக்கூடிய தகன எரிப்பிலான 'பிளாஸ்ரிக்' உற்பத்திப்பொருட்களின் உற்பத்திக்கு/தயாரிப்புக்கு அங்கீகாரத்தை வழங்குவதற்கான திட்டம்

2.4.1 2018ஆம் ஆண்டில், உயிரகரீதியில் தரம்குன்றக்கூடிய தகன எரிப்பிலான 'பிளாஸ்ரிக்' உற்பத்திப் பொருட்களுக்கு பதப்படுத்தப்படாத பொருட்களின் இறக்குமதியாளர்களைப் பதிவுசெய்வதற்கான 16 விண்ணப்பங்கள் மீது பரிந்துரை செய்யப்பட்டது.

2.4.2 2018ஆம் ஆண்டில், உயிரகரீதியில் தரம்குன்றக்கூடிய தகனவெரிப்பிலான 'பிளாஸ்ரிக்' உற்பத்திப் பொருட்களுக்கு தயாரிப்பாளர்களைப் பதிவுசெய்வதற்கு 10 விண்ணப்பங்கள் மீது பரிந்துரை செய்யப்பட்டது.

2.4.3 2018ஆம் ஆண்டில், திட்டத்தின் வருமானம் ரூபா 492,000 ஆகும்.

3. பிரிவின் முழுமையான வருமானம்

3.1 இத்திட்டத்தின் ஊடாகத் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 164.1 மில்லியன் என்ற இலக்குக்கு எதிராக ரூபா 191.694 மில்லியன் ஆகும்.

4. திட்டங்களுக்கான தத்துவமளிப்பு

4.1 UTZ தேயிலைச் சான்றளிப்புக்கான தத்துவமளிப்பு பெறப்பட்டது.

4.2 2018ஆம் ஆண்டின் போது, SLS குறிகள் திட்டத்திற்கான தத்துவமளிப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன், சான்றளிப்பு உறுப்புக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

நிருவாகப் பிரிவு

நிறுவனத்தின் சகல நிருவாகப் பணிக்கும் பிரிவு பொறுப்பானதாகும். ஊழியர்களின் ஆட்சேர்ப்புக்கள், பதவியேற்றங்கள், பயிற்சி/தணிக்கைகள்/கருத்தரங்குகள் ஆகியன தொடர்பான கடல்கடந்த நாடுகளுக்கான வருகைதரல்கள், சகல தனிப்பட்ட கோவைகள், போக்குவரத்து, கொள்வனவு மற்றும் நிருவாக விடயங்கள் தொடர்பான நாளாந்த கிரமமான பிரச்சனைகள் ஆகியவற்றினை ஒழுங்குபடுத்தல் ஆகியன பிரிவின் பணிகளாகும்.

2018ஆம் ஆண்டின் போது, மூலதன கொள்வனவுகளின் கீழ், ரூபா 42.62 மில்லியன் பெறுமதியைக் கொண்ட ஆய்வுகூட உபகரணங்களும் மற்றும் ரூபா 19.53 மில்லியன் பெறுமதியைக் கொண்ட வேறு மூலதனச் சாதனங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

பாதுகாப்பு, உணவகம், போக்குவரத்து மற்றும் சுத்திகரித்தல் ஆகியவற்றுக்கான வெளிமூலத்திலான சேவை ஒப்பந்தங்கள் சேவை வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டன.

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, நிருவாகப் பிரிவினால் பின்வரும் ஆட்சேர்ப்புக்கள்/பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், உதவிப் பணிப்பாளர், கனிஸ்ட முகாமையாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) ஆகியவற்றின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன.

1.	பணிப்பாளர் நாயகம்	01
2.	பிரதிப் பணிப்பாளர் நாயகம்	01
3.	தொழில்நுட்ப உதவியாளர்	05

நோக்கெல்லையின் ஆண்டின் போது முன்னாள் பதில் பணிப்பாளர் நாயகம் திருமதி டபிள்யு.என்.என்.சத்தரசிங்க தனது இளைப்பாறுதலுக்கு அறிவித்தலை வழங்கியதுடன், விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சித் திறன்கள் அபிவிருத்தி, தொழில்முன்னிலை பயிற்சி, கண்டிய மரபுரிமை அமைச்சினால் கலாநிதி (திருமதி) சித்திக்கா ஜி.சேனாரத்ன தெரிவுசெய்யப்பட்டதுடன், 01.08.2018இலிருந்து செயற்படத்தக்கதாக பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார்.

ஆண்டின் போது, 16 கருத்தரங்குகள்/பயிற்சி செயல்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், உள்நாட்டுப் பயிற்சிச் செயற்றிட்டத்தின் கீழ், 33 ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, நிறுவனத்தின் சகல ஊழியர்களும் லங்கா ெ‘ாஸ்பிட்டல் பிறைவேற் லிமிற்றெற்றினால் மருத்துவ சோதனையை மேற்கொண்டனர்.



நலன்புரி சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு நாள் சுற்றுலா மற்றும் 03 நாட்களைக் கொண்ட சுற்றுலா போன்ற வருடாந்த நிகழ்ச்சிகள் பணியாட் உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இ.க.நி.இன் துரிதமாக வளர்ச்சியுறும் செயற்பாடுகளின் ஆகக்கூடுதலான கிராக்கியை நிறைவேற்றுமுகமாக அதன் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை நிறைவேற்றுவதற்காகவும் அத்துடன் பிரிவின் குறிக்கோள்களைச் சாதிப்பதற்காகவும் அதன் முழுமான பங்களிப்பினை நிருவாகப் பிரிவு வழங்கியுள்ளது. ஏனைய பிரிவுகள் சரிவர தொழிலாற்றுவதை அனுமதிப்பதற்காக சகல ஆதரவிலான செயற்பாடுகள் செயற்றிறனாகவும் விளைதிறனாகவும் மேற்கொள்ளப்பட்டன.

தகவல் தொழில்நுட்ப அலகு

01. மென்கணியப் பொதிகளின் கண்காணித்தல் மற்றும் பராமரிப்பு

அ) நிதிசார் முறைமைப் பொதிகள்
* பொதுப் பேரேட்டு முறைமை (GL)
* கடன்வழங்குனர் முறைமை (CS)
* கடன்தருனர் முறைமை (DS)

ஆ) சம்பள முறைமை

இ) பொருட்பட்டியல் கட்டுப்பாட்டு முறைமை

ஈ) இறக்குமதிச் சோதனைத் திட்டம் - மென்கணிய முறைமை

உ) த.தொ. பொருட்பட்டியல், பராமரிப்பு முறைமை

ஊ) சான்றுப்பத்திர அச்சிடல் மென்கணிய முறைமை

எ) ஆய்வுகூட பிரிவுக்கு செயற்றிறன் கண்காணிப்பு முறைமை

ஏ) உற்பத்தி சான்றளிப்பு பிரிவுக்கு சான்றுப்பத்திர அச்சிடுதல் மென்கணியம்

ஐ) கட்டளைகள் தகவல் முறைமை (WINISIS)

ஒ) விநியோக தரவுத்தளம்

02. இ.க.நி. செயற்பாடுகளுக்கு வீரிவான தகவல் முறைமை (CMIS) அபிவிருத்தி கருத்திட்டம்

தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் (TEC), ஒரு மென்கணிய விருத்தியாளரைத் தெரிவுசெய்வதற்காக கொள்வனவு ஆவணப்படுத்தல் (முறைமை ஆய்வு, தொழிற்பாட்டிலான தேவைப்பாட்டு விவரக்கூற்று (FRS), அக்கறையின் வரைவு வெளிப்பாடு (EOI), வரைவு விசாரணை அலுவல் நியதிகள் (TOR), வரைவு முன்மொழிவுக்கான வேண்டுகோள் (RFP) ஆகியன முடிவாக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சு கொள்வனவு குழுவிலிருந்து (MPC) அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

மென்கணிய முன்னேற்ற கருத்திட்டத்திற்கு (CMIS) அமைவாக, மென்கணிய தீர்வின் (CMIS) தோதான அமுலாக்கத்திற்காக பின்வரும் கருத்திட்டங்களை இ.க.நி. அடையாளம் கண்டுள்ளதுடன், விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சினால் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்கள் (TEC), நியமிக்கப்பட்டுள்ளன.

கருத்திட்டம் 1: மென்கணிய முறைமையின் பயனுறுதிவாய்ந்ததும், தடங்கலற்றதுமான செயற்பாட்டுக்காக நடைமுறையிலான வன்கணியத்தை தரமுயர்த்தல் அத்துடன் புதிய வன்கணியத்தையும் மற்றும் தொடர்பான மென்கணியத்தையும் திரட்டுதல்.

கருத்திட்டம் 2: பிரதான கட்டிடத்தில் மின்னல் பாதுகாப்பு முறைமையை தரமுயர்த்துதல்.

கருத்திட்டம் 3: CMIS முறைமையினால் நுகரப்படும் மேலதிக வலுவை அறவிடுவதற்காக சூரிய சக்தி PV முறைமையொன்றை அமுலாக்குதல்.

03. இ.க.நி. இணையதள அபிவிருத்திக் கருத்திட்டம்

2018 ஜூலையில் புதிய இணையதளம் ஆரம்பிக்கப்பட்டது. இது லங்கா கொமினிக்கேஷன் சேர்விசஸ் (பிறை.) லிமிற்றெற்றில் விருந்தோம்பப்பட்டுள்ளது. பராமரிப்பு நோக்கத்திற்காக இணையதள விருத்தியாளருடன் தகவல் தொழில்நுட்ப அலகு ஒருங்கிணைக்கின்றது. மேலும் தொடர்பான பிரிவுசார் தலைவர்களின் அங்கீகாரத்துடன் இணையதளத்தின் உள்ளடக்கத்தை தகவல் தொழில்நுட்ப அலகு புதுப்பிக்கின்றது.

04. அலுவலகப் பிரயோகங்களுக்கான உரிமையிலான மென்கணியம்

தனிப்பட்ட கணனிகளுக்கும் மற்றும் மடிக்கணனிகளுக்கும் மைக்ரோசொப்ட் ஒ.்பிஸ் புறபெர்சனல் பிளஸ் உத்தரவுப்பத்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டு அமுலாக்கப்பட்டுள்ளது. மேலும், மைக்ரோசொப்ட் ஒ.்பிஸ் 365 பிரயோகங்களின் அமுலாக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

05. புதிய பரிமாறி புலம்பெயர் பணிகள்

புதிய பரிமாறகளின் நிறுவுதலும் மற்றும் உருவமைத்தலும் புதிய பரிமாறிகளுக்கு பழைய 'சேர்வர்'களிலிருந்து புலம்பெயர்வும் மேற்கொள்ளப்பட்டது (90% முடிக்கப்பட்டுள்ளது).

06. புதிய வைரஸ் எதிர்ப்பு மென்கணிய முறைமை

புதிய வைரஸ் எதிர்ப்பு மென்கணிய முறைமையின் (McAfee) பரிமாறி நிறுவுதலும் மற்றும் உருவமைத்தலும் அத்துடன் தனிப்பட்ட கணனிகளுக்கும் மற்றும் மடிக்கணனிகளுக்கும் வைரஸ் எதிர்ப்பினை நிறுவுதலும் மேற்கொள்ளப்பட்டன.

07. CCTV கமரா முறைமையை கண்காணித்தல் மற்றும் பராமரித்தல்

பராமரிப்பு நோக்கத்திற்காக வர்த்தகருடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்வதற்காக தகவல் தொழில்நுட்ப அலகுக்கு பொறுப்பு வழங்கப்பட்டது.

08. வரவு மற்றும் லீவு முறைமையைக் கண்காணித்தல் மற்றும் பராமரித்தல்

2018ஆம் ஆண்டிலிருந்து மேற்படி பொறுப்பு தகவல் தொழில்நுட்ப அலகுக்கு வழங்கப்பட்டது. மென்கணியத்தின் புதிய விருத்தாந்தத்தின் கொள்வனவுக்கான முன்மொழிவு அங்கீகாரத்திற்காக உச்சநிலை முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

09. LGN 2.0 WIFI வலைப்பின்னல்

LGN 2.0 WIFI வலைப்பின்னல் கருத்திட்டத்தின் நிறுவுகை ஆரம்பிக்கப்பட்டதுடன், ஸ்ரீ லங்கா ரெலிகொம்மினால் அமைவிட அளவு மேற்கொள்ளப்பட்டது.


10. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

விவரக்கூற்றுக்கள் வரையப்பட்டன. விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சினால் TEC நியமிக்கப்பட்டது.

வலைப்பின்னல் வடமிடல் - பிரிவுகளுக்கான (பயிற்சி, நிதி, ஆவணப்படுத்தல் மற்றும் தகவல், அளவையியல், ஆய்வுகூடப் பிரிவுகள்) விவரக்கூற்று வரையப்பட்டது.

பரிமாறி அறை - சாதனங்கள்/கருவிகள்/பிரித்தெடுப்புக்கள் அடையாளங்காணப்பட்டு விவரக்கூற்று வரையப்பட்டது.

வன்கணிய மற்றும் மென்கணிய உத்தரவுப்பத்திரமிடல் - சாதனங்கள்/கருவிகள் மற்றும் உத்தரவுப்பத்திரமிடல் தேவைப்பாடு ஆகியன அடையாளங்காணப்பட்டன.





நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாக்குமுகமாக ஆளுகின்ற நிதிசார் விதிகள், ஒழுங்குவிதிகள், சுற்றுநிருபங்கள், கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள் ஆகியவற்றுக்கு இணையாக, நிதிசார் நிருவாகத்தைப் பின்பற்றுவதற்கு இப் பிரிவு பொறுப்பானதாகும். வருமானத்தின் சேகரிப்பு, விநியோகஸ்தர்களுக்கும், ஊழியர்களுக்குமான கொடுப்பனவுகள், வரவு-செலவுத்திட்டக் கட்டுப்பாடு, வருடாந்த அளவீட்டுச் சபை, வருடாந்தக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் அத்துடன் வேறு முகாமைத்துவ தகவல் மற்றும் சகல வேறு நாளாந்த நிதிசார் செயற்பாடுகள் ஆகியன உட்பட சகல நிதிசார் முகாமைத்துவப் பணியை பிரிவு மேற்கொள்கின்றது.

கணக்காய்வு



இ.க.நி.இன் சகல தொழிற்பாடுகளின் உள்ளகக் கணக்காய்வுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், நிறுவனத்தின் பணியினை வலிமைப்படுத்து வதற்கு அறிக்கைகளைச் செய்வதற்கும் உள்ளகக் கணக்காய்வு பொறுப்பானதாகும்.

உள்ளகக் கணக்காய்வின் பிரதான செயற்பாடுகள் வருமாறு:

- நடைமுறையிலான உள்ளகக் கட்டுப்பாடுகளை மேலும் பலப்படுத்துவதற்கும் அத்துடன் புதிய உள்ளக கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்குமான ஆலோசனைகளைச் சமர்ப்பித்து உள்ளகக் கட்டுப்பாடுகளை கண்காணித்தல்.
- நிதிசார் மற்றும் தொழிற்படுத்தல் தகவலைப் பரீட்சித்தல் (உதாரணம்: கணக்கீட்டு முறைமைகளை மதிப்பாய்தல், வெளிவாரி கணக்காய்வாளர் செய்யும் அதே வழியில் கொடுக்கல் வாங்கல்களினதும், மீதிகளினதும் மீதான விபரங்களின் சோதனைகளை மேற்கொள்ளுதல்).
- செயற்பாட்டின் பொருளாதாரத்தையும், செயற்றிறனையும் மற்றும் பயனுறுதித்தன்மையையும் மதிப்பாய்தல் (நிறுவனத்தின் நிதிசாராத கட்டுப்பாடுகளை நோக்குவதை இது உள்ளடக்கும்).
- சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் வேறு வெளிவாரி தேவைப்பாடுகள் ஆகியவற்றுடன் இணக்கத்தின் மதிப்பாய்வு.
- சந்தேகப்பட்ட மோசடியிலான தருணங்களில் விசேட விசாரணைகள்.
- சம்பந்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளையும், அறிக்கைகளையும் தயாரித்தல்.
